
# தேச முரசு
Thesa murasu

ஒன்றாய் இணைவோம் விடுதலை பெற்றிடுவோம்

August 2016 | மலர் 1 | FREENEWSPAPER | இலவச பிரதி | இதழ் 2


# ஐ. நா. கூட்டத் தொடர்!
## சவால்களை முறியடிக்குமா தமிழர் தரப்பு?



ஜூன் மாதம் 13ஆம் நாள் ஐ நா மனித உரிமைகள் கழக கூட்டத் தொடர் ஆரம்பமாகி 3 வாரங்கள் நடைபெற்று ஜுலை 1ஆம் திகதி நிறைவு பெற்றது. இந்த கூட்டத் தொடர். தமிழ் மக்களால் கூர்ந்து அவதானிக்கப்பட்டது. ஐ நா மனித உரிமைக் கழகத்தின் முடிவுகளுக்கும் தமிழ் மக்களுக்கும் என்ன தொடர்பு? குறிப்பாக முள்ளிவாய்க்கால் இன அழிப்பின் பின்னணியில் ஐ.நா விடமிருந்து நாம் எதிர்பார்ப்பது என்ன?

### நடந்தது என்ன?

கடந்த 2009ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தில் ஐ நா குறிப்பிட்டது போல 70,000இற்கு மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டும் 146,679 பேர் காணாமல் போயும் உள்ளனர். மேலும் சர்வதேச சட்டங்களினால் மோசமான குற்றங்கள் என வரையறுக்கப்பட்டுள்ள பல மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன. 2009 ஜூனில் தமிழினப் படுகொலையை நடாத்திவிட்டு இலங்கை அரசு பயங்கரவாத்திற் கெதிரான போரை வெற்றி கொண்டு விட்டதென இதே ஐ நா மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி நற்சான்றிதழ் பெற்றுக் கொண்டது. ஆரம்பத்தில் தமிழ் மக்கள் நம்பிக்கையற்று தோல்வி மனப்பான்மையில் இருந்த போதிலும் பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டியங்கும் பிரித் தானிய தமிழர் பேரவை (BTF), கனடாவை தளமாகக் கொண்டியங்கும் கனேடிய தமிழர் பேரவை (CTC) இணைந்து எம் மக்களுக்கு நடந்த இனப் படுகொலைக்கு பதில் கூற வேண்டிய கடப்பாடுள்ள ஐ.நா மன்றத்தினை குறி வைக்கத் தொடங்கின.

### ஐ.நா நிபுணர்குழு(UN Panel of experts).

2009யிலும் அதன் பின்னரும் மனித வதையை நிரூபிக்கும் பல்வேறு திடுக்கிடும் ஆதாரங்கள் பிரித்தானியாவிலும் ஏனைய நாடுகளிலும் வெளிக் கொண்டு வரப்பட்டதும் உலக அரங்கில் நீதி கேட்டு விஸ்வரூபமெடுத்த தமிழ் மக்களின் பல்வேறு போராட்டங்களும் ஐ நா செயலாளர் நாயகம் பான் கி மூன் 2010ஆம் ஆண்டில் ஐ நா நிபுணர் குழு (UN Panel of experts) ஒன்று அமைத்து ஆதாரங்கள் திரட்டி அறிக்கை வெளியிட நிர்ப்பந்தித்தது. இதனை சரியாகப் பயன்படுத்தி செயலில் இறங்கிய பிரித்தானிய தமிழர் பேரவை மற்றும் புலம்பெயர் அமைப்புகள், உலகளாவிய மனித உரிமை அமைப்புக்கள் பல்வேறு ஆதாரபூர்வமான சாட்சியங்களை திரட்டி சமர்பித்ததன் மூலம் ஐ நா நிபுணர் குழு அறிக்கை பல்வேறு மோசமான குற்றங்கள் இடம் பெற்றதனை சுட்டிக் காட்டியதோடு 40,000இற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என குறிப்பிட்டிருந்தது.




### ஐ நா தீர்மானங்கள்

இதனை அடுத்து அரசியல்ராஜதந்திர நடவடிக்கைகளை மேலும் விஸ்தரித்து தத்தம் நாடுகளிலும் ஐ நா மன்றம் போன்ற உலகின் தளங்களிலும் துல்லியமாக திட்டமிட்ட அடிப்படையில் புலம் பெயர் அமைப்புகள் தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தின் அடுத்த அத்தியாயத்தினை நகர்த்தத் தொடங்கின. இன் நீண்ட பயணத்தில் 2012 ஆம் ஆண்டு அதே ஐ.நா மன்றம் இலங்கைக்கெதிரான தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருமளவிற்கு மாற்றியது புலம் பெயர் தமிழ் மக்களின் ஒரு அசாத்திய வெற்றியே ஆகும். மேலும் அடுத்தடுத்து 2013, 2014ஆண்டுகளில் வந்த ஐ நா மன்றத் தீர்மானங்கள். வரவரக்காரம் கூடிச் செல்லக் காரணமாக அமைந் ததற்கு BTF, CTC, USTPAC மற்றும் TCHR போன்ற புலம்பெயர்அமை ப்புகளின் கடும் உழைப்பும்அணுகு முறையும் குறிப்பிடத்தக்கது.2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மனித உரிமைக் கழக ஆணையாளர் நவநீதம்பிள்ளை அவர்களினால் சர்வதேச விசாரணைக் குழுவொன்று (OISL) நிறுவப்பட்டு செப்டெம்பர் தொடங்கி நவம்பர் காலப் பகுதிக்குள் ஆதாரங்கள் திரட்டப்பட்டு ஆராய்ந்து தொகுக்கப்பட்டு புதிய ஐ நா ஆணையாளர் சய்யத் "ஹசேன் அவர்களால் 261 பக்கங்களைக் கொண்ட அறிக்கை 16 செப்டம்பர் மாதம் 2015 இல் வெளியிடப்பட்டது. இவ் அறிக்கையில்சய்யத்"ஹசைன் தமிழ் மக்கள் மீது இலங்கைராணுவத்தினால் மிலேச்சத்தனமாக புரியப்பட்ட குற்றங்கள் தொடர்பாக பரிந்துரை செய்யப்பட நடவடிக்கைகளை முழுமையாக அமுல் படுத்துமாறு கேட்டுக்கொண்டார்இதைத்தொடர்ந்து அமெரிக்கா தூதராலயத்தில் ஒரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது இக்கலந்துரையாடலிற்கு....


தொடர்சி2ம்பக்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதற்பக்க தொடர்சி

தமிழர் தரப்பிலிருந்து. BTF,CTC, USTPAC பிரதிநிதிகளும் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கு பற்றினர். அமெரிக்க பிரித்தானிய ராஜதந்திரிகள் இச்சந்திப்பை வழி நடத்தினர். இதில் தமிழர் தரப்பினர் வலுவான ஒரு தீர்மானத்தின் அடிப்படைகளை வலியுறுத்தினர்.

2015 செப்டம்பர் கூட்டத் தொடரில் அமெரிக்க, பிரித்தானியா, மொண்டி நீக்ரோ உள்ளிட்ட கூட்டு தலைமை நாடுகளினால் இவ் அறிக்கை தொடர்பான கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இக் கலந்துரையாடல்களில் இலங்கை அரசு புதிய தீர்மான வரைவினை ஏற்றுக் கொள்ள மாட்டோம் எனவும் அதிலிருந்த 14இற்கு மேற்பட்ட பந்திகளை நீக்க வேண்டுமென்றும் கடுமையாக வற்புறுத்தியது. சீனா, பாகிஸ்தான், கியூபா போன்ற பல ஸ்ரீலங்கா சார்பு நாடுகள் தீர்மானத்தினை வலுவிழக்கச் செய்ய இலங்கைக்கு தம் முழுமையான ஆதரவினை வழங்கின. ஆயினும் பிரித்தானியா, அயர்லாந்து, கனடா, சுவிட்சர்லாந்து போன்ற பல மேற்குலக மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான BTF, CTC, USTPAC, போன்ற புலம்பெயர் அமைப்புக்களும் ஐ நா ஆணையாளர் அறிக்கையினை (OISL Report) முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென விவாதித்தனர்.

ஒக்டோபர். 2015 தீர்மானம் (30/resolution)

பரபரப்பான இந்த நாட்களில் பிரித்தானிய தமிழர் பேரவை பல தொடர் ராஜதந்திர சந்திப்புகளை மேற்கொண்டது. பிரித்தானிய வெளியுறவு அமைச்சகம் (FCO) பிரதமர் அலுவலகம் மூலமாகவும் ஐரோப்பிய ஒன்றியம், மொண்டி நீக்ரோ, தென்னாபிரிக்கா, இந்தியா, சுவிர்சர்லாந்து, போன்ற பல நாடுகள் மூலமாகவும் அமெரிக்காவில் செயல்படும் சகோதர அமைப்பான USTPAC ஊடாக அமெரிக்க ராஜாங்க அமைச்சு மூலமாகவும் ஆணையாளரின் அறிக்கையின் முழுமையான அமுலாக்களின் தேவையை வலியுறுத்தினார்கள்.

இக்கூட்டத் தொடரின் இறுதிக் கட்டம் அண்மித்த வேளையில் அங்கே கலந்துரையாடலில் கொண்டு வரப்பட்ட அம்சங்களில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டு இலங்கை உற்பட அனைத்து நாடுகளும் இணைந்து ஏகமனதான தீர்மானம் (30/1resolution) நிறைவேற்றப்பட்டது. ஜூன் 2016 கூட்ட தொடரில் மேற்படி தீர்மானத்தின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்ட முன்னேற்றங்கள் தொடர்பான ஐ நா மனித உரிமைகள் ஆணையாளர் தன் வாய்மூல அறிக்கையை சமர்ப்பித்து உள்ளார். ஜூன் 2016 கூட்டத் தொடர் தமிழர் பிரதிநிதிகளிற்கு ஒரு பெரும் சவாலாக இருந்தது. இலங்கையின் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னரும் வெள்ளை வான் கடத்தல்கள், பாலியல் து்பிரயோகங்கள், சித்திரவதைகள் தொடந்த வண்ணமுள்ளன. அது மட்டுமன்றி பரந்து விரிந்த நிலப் பரப்பில் அடுக்கடுக்காய் உள்ள இராணுவ ஆக்கிரமிப்புகள் குறைக்கப்படாமை, நிலங்கள் அபகரிக்கப்பட்டு அதில் பவுத்த சின்னங்கள், விகாரைகள் அமைக்கப்படல், பாதுகாப்பு படையினர் பொது மக்களின் அன்றாட வாழ்க்கையில் தலையிடல் போன்ற பல விடயங்களை சேகரித்து அம்பலப்படுத்தப்பட்டன. சிறிலங்கா அரசு பிரச்சாரப்படுத்திய பல விடயங்கள் மிகைப்படுத்தப்பட்டவை என்பதனை பி த பே (BTF) துல்லியமாகவும் ஆதாரபூர்வமாகவும் ஆவணங்கள் மூலமாக நாடுகளுக்கும் சர்வதேச மனித உரிமை நிறுவனங்களுக்கும் நிரூபித்தது. முடிவுகளில் செல்வாக்கு செலுத்தும் முக்கியமான நாடுகளை சந்தித்து ஐ நா ஆணையாளர் வாய்மூல அறிக்கை சமர்ப்பித்த பின் நடக்கும் உரையாடல்களில் தம் நாடுகளின் கோரிக்கையினை வெளிப்படுத்துமாறு நட்புறவின் அடிப்படையில் கோரிக்கை வைக்கப்பட்டது. EU, Netherlands Germany United.Kingdom, Republic of Macedonia, Norway, USA, Australia, Canada, Denmark, Estonia, Switzerland, Russian Federation, Republic of Korea>,Republic of Korea, Ghana, Japan, Pakistan, New Zealand, Ireland போன்ற நாடுகள் தம் நாடுகளின் கருத்துக்களை முன் வைத்தன. மிகப் பெரும்பான்மையான நாடுகள் சிறிலங்கா 2015 ஒக்டோபர் ஐ நா தீர்மானத்தில் போதுமான அளவு முன்னேற்றம் இல்லை என்பதனை ராஜதந்திர வார்த்தைகளினால் பதிவு செய்தன. கூட்டத்.தொடர் முடிவுகள் ஐ நா ஆணையாளர் சிறிலங்கா செய்து முடித்துள்ள . சில விடயங்களை பாராட்டினாலும் பெரும்பாலான விடயங்கள் செய்து முடிக்கப்படவில்லை என்பதனை தெளிவாக சுட்டிக் காட்டினார். முக்கியமான நாடுகள் விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் தலையங்கம்

# காற்றற்ற போதும் வாழுவோம்! நம்பிக்கை நமதானது!



கால காலமாக கொடுரமாக அடக்கப்பட்டு அழிக்கப்பட்டு கொண்டிருக்கும் ஒரு இனமானலும் பெரும் போராட்ட சூழலிலும் மனம் தளராது தன்னம்பிக்கையு டன் வாழ்ந்து வரும் இனம் எம் இனம் எம் மண்ணிலும் புலம்பெயர் தேசங்களிலும் ஒவ்வொரு தமிழனும் சந்தித்த சந்தித்துக் கொண்டு இருக்கும் சவால்கள் எத்தனையோ சாவின் விளிம்பில் இருந்து தப்பித்தோர் எத்தனையோ கையில் எந்தப் பொருளுமின்றி இடங்கள் விட்டு இடம் ஓடி மொழி துறந்து ஊர் துறந்து உறவு சொல்ல யாருமின்றி அனாதையாய் அகதியாய் சகதியாய் மிருகமாய் புழுவாய் ஆக்கப்பட்டு ஊன் இன்றி உறக்கமின்றி திரிந்த நாட்கள் திரிகின்ற நாட்கள் எத்தனை எத்தனையோ. எத்துனை துயர் வந்த போதும் அதனை துச்சமாக எண்ணி தூர எறிந்து விட்டு விவேகமாய் வீரமாய் செயற்பட்டு இன்று பல தேசங்களிலும் பல்கிப் பெருகி பலர் வியக்க பார்புகழ் வாழ்வதும். எம் இனம் இத்தனைக்கும் தேவையான தன் நம்பிக்கையைத் தந்தவர்கள் எம்மின வீரமறவர்கள்.

எதிரிகளும் துரோகிகளும் எம்மினத்தை அழித்து துவம்சம் செய்த போதும் அழிக்க முடியாமல் போனதும் எம்மை விட்டுப் பிரிக்க முடியாமல் போனதும் எம்மினப் பற்றும் எம்மிடம் இருந்த தன்னம் பிக்கையும்தான். ஆனாலும் 2009 ற்குப் பின்னர் நாம் கட்டிக் காத்த இந்த நம்பிக்கை சுக்குநூறாய்ப் போனது. அங்கே நம் உறவுகள் வகை தொகையின்றி அழிக்கப்பட்ட அக்கணத்தில் புலம் பெயர்தேசங் களில் வாழும் தமிழர்கள் தோல்வி மனப்பான்மை எனும் சுரியில் சிக்கித் துவண்டு நடைப்பிணமாகி திக்கு திசை தெரியாது புலம்பித் துவண்டனர் விரக்தியின் விளிம்பில் தமிழனே தமிழன் மேல் வீண்பழி சுமத்தினர். தமிழனே தமிழனை எதிரியாய் துரோகியாய் பார்க்கத் தொடங்கினர்.

அதனை மேலும் வலுப்படுத்தி மீண்டும் தமிழினம் தலைதூக்க இயலாது செய்ய சிங்கள பேரின வாதம் பாரிய அளவில் தன் நாசகார சதிகளைப் பின்னியது. தமிழரின் ஒற்றுமையை சிதைக்கும் சக்திகள் பட்டியலிடப்பட்டன. அவை பிரித்தாளும் சதி வலைக்குள் தெரிந்தும் தெரியாமலும் சிக்கிக்கொண்டன. ஒற்றுமைக்கான சக்திகள் எடுக்கும் முயற்சிகள் மீண்டும் மீண்டும் சிதைக்கப் படுவதற்கு இதுவே காரணமாய் அமைந்தன. பன்மையில் ஒற்றுமை என்று பல அமைப்புகள் தோன்றின. ஆனால் எல்லாரும் தமக்குக் கட்டுப்பட வேண்டும் என சிலர் விரும்பினர். தமிழன் மீண்டும் கொடுரமாக வஞ்சிக்கப்பட்டா எத்தனை இடர் வந்தாலும் நீதி நம்பக்கம் நியாயம் எம் பக்கம் என்றெண்ணத்துடன் 'காற்றற்ற போதும் வாழ்வோம்' என்ற தன்னம்பிக்கையுடன் ஆங்காங்கே இருந்த சில தமிழர் நீதிகோர் அறநெறிப் போராட்டங்களை முடக்கிவிட்டனர். ஏளனப் பார்வைகள் கேவலமான பேச்சுக்கள் அத்தனையும் தாண்டி மெல்ல மெல்ல அங்குல நடை நடக்கத் தொடங்கினர். நல்ல உள்ளம் கொண்ட ஊடகவியலாளர்கள் கூட வந்து கை கொடுத்தனர். தமிழ்நாடு எழுந்திருந்து தோழமை கரம் நீட்டியது. சேர்ந்து நின்று தமிழினத்தை தீவிரவாதிகளாக்கி குழிபறித்து வேடிக்கை பார்த்த நாடுகள் தம் நிலை மாற்றி இது போர்குற்றம் இது மானுடத்திற்கெதிரான மனித உரிமை மீறல் என அங்கலாய்க்கத் தொடங்கினர். ஆங்காங்கே தமிழர் சிலர் ஆங்காங்கே தமிழர் பலர் ஆயினர். ஆங்காங்கே சில தமிழர் அமைப்புக்கள் உலகு எங்கெங்கும் தமிழ் அமைப்புக்கள் ஆயின தமிழனை சந்திக்க மறுத்து முத்திரைகுத்தி மூலையில் ஒதுக்கி மொத்தமாய் அழித்த முகமறியா வேற்றார் நின்று நிதானித்து கை குலுக்கத் தொடங்கினர்.ஐநாவில் குழந்தையாய் தவழ ஆரம்பித்தான் தமிழன். நம்பிக்கை ஜோதியாய் நவநீதம்அம்மா போன்றோர் கைத்தாங்கலாய் கூட நடந்தனர். எத்தனையோ அன்பான நேர்மையான மனித உரிமை ஆர்வலர் இணைந்து குரல் கொடுத்தனர். சிங்களப் பேரினவாதம் தந்திரமாய் தன் முகம் காக்க கடினமாய் உழைத்தது. வெற்றிடதுகுளால் பயணித்து ஒளிக் கீற்றினை தரிசித்தோம். ஏழாண்டு தாண்டி எழுந்து நின்றான் தமிழன். சின்னதாய் ஒரு அங்கீகாரத்துடன். நியாயத்துக்காய் எமக்கே எமக்காய் சிலகுரல்கள் ஐநாவில் ஒலிக்கத் தொடங்கின. காலகாலமாய் ஐ.நா கட்டிடங்களிற்கு வெளியில் ஒலித்த எம் குரல்கள் ஐ.நா அரங்கத்தின் உள்ளே அதிரத்தொடங்கியது. அனுபவங்களில் இருந்து கற்றுக் கொண்டு வெற்றிக்கான வியூகங்கள் வகுக்கப் பட்டன. 2009 தமிழனின் நிரந்தரத் தோல்வி என எதிரி நினைத்தது நடக்கவில்லை. தொடர்ச்சியான போரட்டங்கள் வீண் போகவில்லை. வலுவான சாட்சியங்கள் கடல் கடந்தும் வந்தன குவிந்தன. தமிழின அழிப்பின் வரலாற்றுப் பதிவாக வந்தது இருனூற்றிச் சொச்சபக்க பதிவானது ஐநாவில் வீழ்ந்து விட்டோம் இதுவொன்றும் இனி வேண்டாம் பேரினவாதக் காலில் வீழ்ந்து வந்தனை செய்து தந்ததை வைத்து பிழைத்துப் போவோம் என்று கூறியவர்கள் அடையாளம் காணப்பட்டனர். தமிழ் மக்கள் மெல்ல மெல்ல சுதாரித்துக் கொள்ளும் காலம் இது. சர்வதேசம் இலங்கையை சரியாகக் கையாள வேண்டுமாயின் தமிழர்கள் தம்மை வலுப்படுத்த வேண்டும். 180 பாகை திரும்பியுள்ள உலகில் அம் மாற்றத்தினைக் கொண்டு வந்தவர்களை தமிழ் மக்கள் வலுப்படுத்த வேண்டும். வெட்டிப் பேச்சு வேலைக்கு ஆகாது என்பார்கள்.

இன்றைய காலம் நமதானது. கடின உழைப்பு தேவையானது. நமக்கு குரல் கொடுப்பதால் சனல் 4 கெலம் மெக்கரே அவர்களைப் போற்றும் சமூகம் தாமும் அவர் போல் நீதிக்காக உழைக்க வேண்டிய காலமிது. காற்ராகிப் போன எம் மறவர் கனவுகள் நனவாக வேண்டும். காற்றற்ற போதும் வாழ்வோம் எம் தமிழுக்காய். நம்பிக்கயுடன் தொடர்வோம். அடுத்த அத்தியாயத்தை நம்பிக்கையுடன் படைப்போம்.

நீதிக்கான பயணம் இறுதி வெற்றிவரை தொடரட்டும்.



2ம் பக்க தொடர்சி

நீதிபதிகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்று கோரியது மற்றும் சிறிலங்காவினால் நிறைவேற்றப்படாத பல விடயங்களை சுட்டிக் காட்டியது சிறிலங்காவின் புதிய அரசிற்கு பெரும் ஏமாற்றமே ஆகும். கூட்டத் தொடர் சிறிலங்கா அரசின் எதிர்பார்ப்புக்கேற்றது போல முடியாதது தமிழர் தரப்பின் செயல்பாட்டினாலேயே என்பது வெளிப்படையானது. தமிழ் மக்கள் கடந்த 68 வருடங்கள் ஓயாது போராடி வரும் வெவ்வேறு வடிவங்களில் கடந்த 7 வருடங்கள் ஐ நா மனித உரிமைகள் கழகத்தினூடாக முன்னெடுக்கும் நீதிக்கான போராட்டம் பல விடயங்களைச் சாதித்துள்ளது. இதற்கு வலுவான ஆதரவினை உலகெங்கினுமுள்ள தமிழ் மக்கள் வழங்க வேண்டிய கடமை இன்றியமையாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமைவழங்கப்படல் வேண்டும் பிரித்தானியாவின் எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் அனைத்துக் கட்சி பாராளுமன்ற குழு தலைவர் ஆதரவு!



தமிழர்களுக்கான அனைத்துக்கட்சி பாராளுமன்ற குழுவின் தலைவர் ஜேம்ஸ் பெர்ரி (James Berry MP) அவர்கள் தமிழர்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்படுவதுடன் தமிழர்களுக்கான சுய நிர்ணய உரிமை வழங்கப்படல் வேண்டும் என தனது புது வருட வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் இப் புது வருடத்தில் ஐ.நா சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீதி தொடர்பான பொறிமுறை நம்பகரமானதகவும் சுதந்திரமானதகவும் செயற்படுவதை உறுதிப்படுத்துவதுடன் தமிழர்களின் அரசியல் தொடர்பான அபிலாசைகள் நிறைவேற்றப்பட்டு தமிழர்களுக்கான சுய நிர்ணய உரிமை வழங்கப்படல் வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். இலங்கை அதிபர் மைத்திரி அவர்கள் தமிழர்களின் நிலங்களை மீள ஒப்படைத்தல் மற்றும் இராணுவ வெளியேற்றம் தொடர்பாக சர்வதேசத்திற்கு வழங்கிய உறுதிமொழிகளை மதிக்க வேண்டும் என்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன் பிரித்தானிய அரசும் தமிழ் மக்களும் வெறும் வாக்குறுதிகள் மட்டுமல்லாது அவை நடைமுறைப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் 11-04-2016ஆம் திகதி திங்கள் அன்று மாலை பிரித்தானியத் தொழில்கட்சிக்கும், பிரித்தானியத் தமிழர்களுக்குமிடையிலான ஒன்றுகூடலில் கலந்து கொண்ட பிரித்தானியாவின் எதிர்க்கட்சித் தலைவர் திரு ஜெரேமி கொர்பின; (Jeremy Corbyn) அவர்கள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தார். பிரித்தானியாவின் முக்கிய தலைவர்கள் அடுத்தடுத்து தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக குரல் எழுப்பத் தொடங்கியுள்ளமை மிகுந்த கவன த்திற்குரியது. ஒரு நாட்டின் ஆழும் கட்சியையும் எதிர்க் கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் தமிழர்கள் தொடர் பானதும் இலங்கை அரசுக்கு எதிரானதுமான இவ்வாறான வெளிப்படையான கருத்துகளுக்குப் பின்னால் புலம் பெயர் வாழும் தமிழ் அமைப்புக்களின் தீவிரமான அரசியல் செயற்பாடுகளே முக்கிய காரணமாக உள்ளது. பிரித்தானிய தமிழர் பேரவையினரால் உருவாக்கப்பட்ட பிரித்தானியாவின் அனைத்துக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை ஒன்றிணைத்து செயற்படும் அமைப்பாக தமிழர்களுக்கான அனைத்துக்கட்சி பாராளுமன்ற குழு செயற்பட்டு வருகின்றது. இவ் அமைப்பினூடாக பிரித்தானிய தமிழர் பேரவை தொடர்ச்சியாக தமிழர்களின் அரசியல் தொடர்பான நடவடிக்கைகளை பிரித்தானியாவில் மேற்கொண்டு வருகின்றனர். கடந்த பத்து வருடங்களாக பிரித்தானிய தமிழர் பேரவையினரால் தொடர்ச்சியாக மேற்க்கொள்ளப் பட்டு வரும் இவ்வா றான அரசியல் நடவடிக்கைகள் சர்வதேச நாடுகளின் தலைவர்களின் மத்தியில் தமிழர்கள் தொடர்பான கரிசனையையும் தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பாக சர்வதேச நாடுகளின் தலையீட்டின் முக்கியத்துவம் குறித்தும் தாக்கத்தினை ஏற்ப்படுத்தி உள்ளது. பிரித்தானியா தொடர்ச்சியாக இலங்கைக்கு எதிரான அழுத்தங்களை பிரயோகிப்பதற்கும் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பாக சுதந்திரமான சர்வதேச விசாரணைக்கு தொடர்ச்சியாக குரல் கொடுப்பதற்கும் பிரித்தானிய தமிழர் பேரவை (BTF) மற்றும் British Tamil Conservatives ; (BTC) Tamil For Labour (TfL) Tamil



Friends of Lib dem (Tflifdem) போன்ற ஏனைய புலம் பெயர் தமிழ் அமைப்புக்களின் தொடர்ச்சியான அரசியல் செயற்ப்பாடுகள் முக்கிய பங்கினை வகித்து வருகின்றது. கடந்த மார்ச் மாதம் பிரித்தானிய தமிழர் பேரவையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட தமிழர்களுக்கான அனைத்துக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடனான ஒன்று கூடல் நிகழ்வில் பங்குபற்றிய பிரித்தானியாவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை அரசினால் தொடர்ச்சியாக தமிழர்களுக்கு எதிராக மேற்க்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாக தமது கண்டனங்களை தெரிவித்ததுடன் இலங்கை அரசு யுத்தக்குற்றம் தொடர்பாக பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளை மேற்க் கொள்வதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தீர்வினை வழங்குவதற்க்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறித்தியிருந்தனர். அண்மைக்காலமாக பல உலகத் தலைவர்கள் சர்வதேச விசாரணை மற்றும் தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமை தொடர்பான தமது ஆதரவினை வெளிப்படையாக வெளிப்படுத்து வதுதமிழர்கள்மத்தியில் ஒரு புதிய நம்பிக்கையினை உருவாக்கியுள்ளது. குறிப்பாக தமிழர்களுக்கான அனைத்துக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடனான ஒன்றுகூடல் நிகழ்விற்கு வாழ்த்துச் செய்தியை அனுப்பிய பிரித்தானிய பிரதமர் சர்வதேச விசாரணை தொடர்பான தனது உறுதியான நிலைப்பட்டை மீண்டும் உறுதிப் படுத்தி இருந்ததுடன் ஸ்பெயினிலுளள காடலோனியா மாநிலத்தின் சுதந்திரத்துக்கான ஒருமைப்பாட்டு அமைப்பினை (Catalan Solidarity for Independence) உருவாக்கியவரான அல்போன்ஸ் லோபெஸ் டேன (Alfons Lopez Tena)அவர்கள் இலங்கைத் தீவில் தமிழர் தேசத்திற்க்கான அங்கீகாரமும் சுயநிர்ணய உரிமையும் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்திருந்தமை இங்கு குறிப் பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கழகம்

## தமிழருக்கான ஒரு தளம்



கடந்த 2009ம் ஆண்டு தமிழர்களுக்கு என்றும் மறக்க முடியாத பல வடுக்களை ஏற்படுத்தி எம் மக்கள் லட்சக் கணக்கில் கொத்துக் கொத்தாக கொன்று குவிக்கப்பட்டு இலங்கை அரசினால் ஓர் இன அழிப்பை மேற்கொண்ட காலப் பகுதியாகும். தமிழர்களுக்கு பக்க பலமாகவும் பாதுகாப்பாகவும் பல தசாப்தங்களாக விளங்கிய தமிழர்களுக்கான ஆயுதப்பலம் பல உலக நாடுகள் இணைந்து முற்றாக அழித்த பொழுது ஈழத்தில் தமிழர்களுக்கான எதிர்காலம் முற்றாகவே அழிக்கப்பட்டது போன்ற ஒரு தோற்றப்பாட்டையும் தமிழர்களுக்கு மத்தியில் எதிர்காலம் குறித்த அவ நம்பிக்கையையும் உருவாக்கியிருந்தது. இன்றைய கால கட்டத்தில் தமிழர்கள் விடுதலைப் போராட்டங்கள் தொடர்பான ஒரு யதார்த்தத்தினைப் புரிந்து கொள்ள வேண்டும். இன்று உலகில் சுதந்திரம் அடைந்த பல தேசங்களும் தமது புரட்சியின் பொழுது மீண்டும் மீளெழ முடியாது என்ற நிலைமையின் பின்பும் அவர்களின் தொடர்ச்சியான போராட்டமும் அவர்களின் நம்பிக்கையும் மட்டுமே அவர்களுக்கு என்று ஒரு தேசம் உருவாகக் காரணமாக இருந்தது. இன்றைய வியட்னாமின் சுதந்திரப் போராட்டத்தின் கதாநாயகன் ஹோ-சி-மின் தன் கண் முன்னே தனது குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் இழந்தவர். நம்பிக்கையை மட்டும் இழக்காது வெளி நாடுகளில் தலை மறைவின் வாழ்கையினூடு புரட்சியை மேற்கொண்டு சுதந்திர வியட்னாம் தேசத்திற்கு வித்திட்டவர். இன்றைய உலக அரசியல் ஒழுங்கில் இவ்வாறான தலைமறைவான புரட்சி என்பது சாத்தியமற்றது. இதனை ஒரு வரலாற்று நிகழ்வாகவும்தொடர்ச்சியான போராட்டங்கள் மூலம் எமக்கான சுதந்திரத்தை அடைய முடியும் என்னும் நம்பிக்கையை உருவாக்கும் முகமாகவுமே இவ் வரலாறு இங்குகுறிப்பிடப்பட்டுள்ளது. தமிழர்களின் ஆயுத வீழ்ச்சிக்குப் பிற்பாடு விடுதலைக்கான அடுத்த கட்ட நகர் வினை மேற்கொள்ள தமிழர் தரப்புக்கு கிடைத்த ஒரு மிகப் பெரிய சந்தர்ப்பம் 2009ம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமை கழக கூட்டத் தொடர் ஆகும். ஆயுதப் போராட்டம் முடிவடைந்த பிற்பாடு நடைபெற்ற இம் முதலாவது மனித உரிமை கூட்டத் தொடர் தமிழர் தரப்பினைப் பொறுத்த வரையில் பலவீனமானஆரம்பமாக இருப்பினும் தமிழர்கள் வசமிருந்த முழுமையான முறையில் கையாளப்படாதிருந்த ஒரு ஆயுதம் இவ் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கழகமாகும் ஆகும். 2009ம் ஆண்டு மே இல் நடை பெற்ற மனித உரிமைகள் கூட்டத் தொடர் தமிழர்களுக்கு சார்புடையதாக இல்லாமல் போனமைக்கான முக்கிய காரணம் தமிழர்கள் தரப்பில் அரசியல் ரீதியாகவோ ஆயுத ரீதியாகவோ பலமேதுமின்றி வெற்றிடமாக்கப்பட்டது என்பதும் அதே சமயம் பொது மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பினை பயங்கர வாதத்துக்கு எதிரான போராட்டமாக சிங்கள அரசு பிரச்சாரம் செய்தமையும் அக்காலப் பகுதியில் பெரும்பான்மையான நாடுகளின் ஆதரவினை இலங்கை அரசு பெற்றிருந்தமையும் தமிழர்களின் குரல் ஐககிய நாடுகள் சபையில் நசுக்கப்பட்டது. ஐக்கிய நாடுகளின் மனித உரிமை கூட்டத்தொடரின் முக்கியத்துவத்தையும் தமிழர்கள் தரப்பின் பலவீனத்தையும் உணர்ந்து கொண்ட முக்கிய புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் குறிப்பாக பிரித்தானியாவில் செயற்படும் பிரித்தானிய தமிழர் பேரவை தமக்கான சரியான தளத்தினை எதிவரும் காலங்களில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை கழகத்தினூடு உருவாக்கும் முகமாக தீவிரமான அரசியல் செயற்பாடுகளை மேற்கொண்டு இருந்தனர். மாறாக தமிழர் தரப்பு இச்சந்தர்ப்பத்தை தவற விடக் கூடிய ஒரு முடிவினை எடுத்திருந்தால் நிச்சயமாக இம் மனித உரிமை மாநாடு என்பது சிங்கள தேசம் தமிழர் மீது மேற்கொண்ட இன அழிப்பை உலக அரங்கில் நியாயப் படுத்துவதற்கான சிங்கள தேசத்திற்கான ஒரு சந்தர்ப்பமாகவே அமைந்திருக்கும். இலங்கையில் இடம் பெற்றது தமிழர்களுக்கான இன அழிப்பேயன்றி பயங்கர வாதத்துக்கு எதிரான போர் அல்ல என்பதை உலகிற்கு தெரியப்படுத்த வேண்டிய பாரிய கடமை புலம் பெயர் தமிழர்களின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டு இருந்தது. தமிழர்கள் இவ்விடத்தில் ஒன்றை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். தேசியத் தலைவரின் இறுதி மாவீரர் உரையில் போராட்டம் புலம்பெயர் தேசத்தில் முன்னெடுக்கப்படல் வேண்டும் என்னும் தீர்க்க தரிசனம் மூலம் எம் மீது உள்ள பாரிய பொறுப்பையும் எம் மீதான தலைவரின் நம்பிக்கையும் நாம் உணர்ந்து செயற்படல் வேண்டும். இங்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகார வரம்பின் எல்லையை அறிந்திருப்பது ஒரு முக்கிய விடயமாகும். மனித உரிமை மீறல்கள் தவிர்ந்த ஒரு அரசியல் முடிவினை மனித உரிமை கழகத்தினால் ஏற்படுத்த முடியாது. எனவே இம் மனித உரிமைக் கழகத்தின் ஊடாக தமிழருக்கான அனைத்து விடயங்களிற்கும் தீர்வு கிடைத்துவிடும் என்பது ஒரு மிகையான கற்பனையே. ஆனால் தமிழர்களின் அடுத்த கட்ட நகர்வினை மேற்கொள்வதற்கு இக்கழகம் ஒரு இன்றியமையாதது. உண்மையில் மனித உரிமை கழகம் என்பது ஒரு நாட்டுக்கு எதிரான ஒரு முடிவை எடுக்கும் அளவிற்கு அதிகாரம் கொண்டது அல்ல. எனினும் ஒரு இனம் மீது சர்வதேச சட்டங்கள் நியமங்களுக்கு மாறாக வன்முறைகள் பிரயோகிக்கப்படும் பட்சத்தில் அது தொடர்பான விசாரணைகளை மேற் கொள்ள முடியும். அதே சமயம் பல





நாடுகளின் ஆதரவுடன் குறிப்பிட்ட நாட்டின் மீது ஒரு அழுத்தத்தை மேற்கொண்டு அந் நாட்டிற்கு எதிரான தீர்மானத்தை கொண்டு வரமுடியும். ஆனால் தன்னிச்சையாக பெரும்பான்மை நாடுகளின் ஆதரவினைப் பெறாமல் எதையும் செய்ய முடியாது. அத்துடன் நாடின்றிய தமிழர்களோ அல்லது வேறெந்த இனக் குழுமங்களோ ஐ நா மனித உரிமைக் கழகத்தின் தீர்மானங்களில் வாக்குரிமையற்றவர்கள். நாடுகள் மட்டுமே வாக்கு போட முடியும். இங்கு பாதிக்கப்பட்ட இனத்திற்கு இன்னுமொரு பாரிய சவால் உள்ளது. எந்த ஒரு நாட்டின் மீதாவது ஓர் குற்றச் சாட்டை முன்வைக்கும் பொழுது அது தொடர்பான பலமான ஆதாரங்களும் முன் வைக்கப்படல் வேண்டும். இவ்வாறான ஒரு சூழல் தமிழர்களைப் பொறுத்த வரையிலும் மிகப்பெரிய ஒரு சவாலாகும். ஏனெனில் தமிழர்களுக்கு சார்பாக குரல் கொடுப்பதற்கு என ஒரு தேசமும் இல்லாத பொழுது அதற்கான ஆதாரங்களை அக்காலப் பகுதியில் சமர்ப்பிப்பது என்பதும் தமிழர்களுக்கு 'சாதகமான தீர்மானங்களைக் கொண்டு வருவதும் சவால்கள் நிரம்பிய ஒரு போராட்ட தளமாகவே தமிழர்களுக்கு இருந்தது.

அடுத்த மலரில்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிலங்காவின் நில அபகரிப்பு நடவடிக்கைகள் சர்வதேசத்திடம் ஆதாரபூர்வமாக அம்பலப்படுத்தப்பட்டுள்ளது!




இலங்கையில் தமிழர்களுக்கான இனப்படுகொலையின் ஒரு பகுதியாக தமிழர்களின் பூர்வீக நிலங்கள் அரசாங்கத்தினாலும், இலங்கை இராணுவத்தினராலும் அபகரிக்கப்பட்டு சிங்களமயமாக்கல் நிரந்தரமாக்கப்படுகின்றது. தொடர்ச்சியான நில அபகரிப்பினை நிறுத்துவதற்கும் அபகரிக்கப்பட்ட தமிழர் நிலங்களை மீள ஒப்படைக்க கோரியும், இவ்வாறான தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் நடவடிக்கைகளை சர்வதேச சமூகத்துக்கு தெரியப்படுத்தும் நோக்கிலும் கடந்த காலங்களில் பிரித்தானிய தமிழர் பேரவையினரால் நில அபகரிப்பு தொடர்பான காத்திரமான செயல்பாடுகள் பல தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. தமிழர் தேசத்தில் திட்டமிட்ட நில அபகரிப்பை அம்பலப்படுத்தும் சர்வதேச மாநாடு பிரித்தானியாவில் ஒழுங்கு செய்யப்பட்டு பன்னாட்டுப் பிரதிநிதிகள், பேராசிரியர்கள், சட்டவல்லுனர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஐ.நா.வில் உயர் பதவிகளில் இருந்தோர், சர்வதேச நிறுவனங்கள் கலந்து கொண்டதுடன் அவர்கள் முன்னிலையில் நில அபகரிப்பு தொடர்பான ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டன.

முன்னைய ராஜபக்ச அரசு தங்கு தடையின்றி மேற்கொண்டு வந்த நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை பிரித்தானிய தமிழர் பேரவை சர்வதேசத்தின் கண் முன்னாள் கொண்டு வந்ததன் மூலம் அதன் வேகம் மட்டுப்படுத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இலங்கை அரசின் மீது மேற்கொள்ளப்பட்ட சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாக இலங்கையின் புதிய அரசு ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தில் சில பகுதிகளை மட்டும் 2015ம் ஆண்டு தமிழர்களிடம் மீள ஒப்படைத்து சர்வதேச சமூகத்தை ஏமாற்றியது. எனினும் இவ்வருடம் புதிய அரசு புனரமைப்பு மற்றும் நட்டஈடு வழங்கல் என்னும் போர்வையில் மீண்டும் தமிழரின் நிலங்கள் அபகரிக்கப்பட்டு சிங்கள குடியேற்றங்களை உறுதி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இது தொடர்பான ஆதாரபூர்வமான தரவுகளை மிகுந்த சிரமத்தின் மத்தியில் சேகரிக்கப்பட்டு ஐ.நா சபைக்கும் அங்கத்துவ நாடுகளின் ராஜதந்திரிகளுக்கும் தெரிவிக்கும் செயற்பாடுகளை பிரித்தானிய தமிழர் பேரவை மேற்கொண்டுள்ளது.

அண்மையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் (CPA) என்னும் கொழும்பிலிருந்து செயற்படும் அமைப்பு வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் வட மாகாணத்தில் 12,000 ஏக்கர் நிலப்பரப்பு இலங்கை இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுள்ளது. எனினும் உண்மையான தரவுகளின்படி 01 மார்ச் 2016ம் ஆண்டு வரையில் 67,427 ஏக்கர் நிலப்பகுதி வட மாகாணத்தில் அபகரிக்கப்பட்டுள்ளமை ஆதரங்களுடன் பிரித்தானிய தமிழர் பேரவையினரால் வெளிச்சத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இலங்கையின் மகிந்த ராஜபக்சவின் முன்னால் அரசாங்கத்தினால் தமிழர் பிரதேசத்தில் அபகரிப்பு செய்யப்பட்ட 69,992 ஏக்கர் நிலப் பகுதியில் இதுவரை புதிய அரசாங்கத்தினால் 2565.5 ஏக்கர் நிலப்பகுதி மட்டுமே ஆட்சி மாற்றத்தின் பின் 2015ம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தது. அதாவது இது வரை விடுவிக்கப்பட்ட நிலப்பகுதி அபகரிக்கப்பட்ட நிலப் பகுதியின் 3.6% மட்டுமே ஆகும். பிரித்தானிய தமிழர் பேரவையினரால் வடபகுதியில் நம்பகமான வட்டாரங்கள் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தற்போதைய அரசாங்கத்திலும் அதிகளவினாலான நிலங்கள் விடுவிக்கப்படாமல் உள்ளது. இலங்கை அரசினால் தொடர்ச்சியாக தமிழர்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வழங்கப்படும் போலி வாக்குறுதிகளையும் ஏமாற்றும் நடவைக்கைகளையும் ஆதாரபூர்வமாக வெளிக்கொண்டு வருவதற்கு தாயகத்திலுள்ள அமைப்புகள் முன்வர வேண்டும் என பிரித்தானிய தமிழர் பேரவை வேண்டுகோள் விடுக்கின்றது. எம் தாயகத்தின் நிலமும் வளங்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் தொடர்ச்சியாக செயல்படுவோம் என பிரித்தானிய தமிழர் பேரவை உறுதியளிக்கின்றது. மேலும் பிரித்தானிய தமிழர் பேரவை, இலங்கை அரசு ஐ.நா சபையின் தீர்மானத்தின் பிரகாரமும் இலங்கை அரசினால் அளிக்கப்பட்ட வாக்குறுதியின் அடிப்படையிலும் தமிழர் பிரதேசத்திலிருந்து இராணுவத்தை வெளியேற்ற உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தமிழர் நிலங்களை மீள ஒப்படைப்பதற்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் பிரித்தானிய அரசாங்கத்திடம் கோரிக்கையினை முன்வைத்துள்ளது. பிரித்தானிய தமிழர் பேரவையினரால் மேற்கொள்ளப்படும் இவ்வாறான தொடர்ச்சியான செயற்பாடுகளுக்கு பக்கபலமாக தாயகத்திலும் புலபெயர் தேசத்திலும் இருக்கும் எம் மக்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன் தொடர்ச்சியான ஆதரவினையும் பிரித்தானிய தமிழர் பேரவை வேண்டி நிற்கின்றது.

| மாவட்டம் | ஆக்கிரமிக்கப்பட்ட நிலம் (01/01/2015) | ஜனவரி 2015இன் பின் விடுவிக்கப்பட்டது | ஆக்கிரமிக்கப்பட்ட நிலம் (01/03/2016) |
|---|---|---|---|
| முல்லைத்தீவு | 19,790 | 134 | 19,656 |
| கிளிநொச்சி | 12,840 | 474 | 12,366 |
| வவுனியா | 23,778 | 14 | 23,764 |
| யாழ்ப்பாணம் | 6,270 | 1709.5 | 4,561 |
| மன்னார் | 7,314 | 234 | 7,080 |
| | 69,992 | 2565.5 | 67,427 |

# முல்லைத்தீவு மாவட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழும் 3451 மீனவக் குடும்பங்களின்வாழ்வாதாரத்திற்கான தொழில் உபகரணமாக 946 இயந்திரப் படகுகள் மட்டுமே உள்ளதாக மாவட்ட நீரியல் வளத் திணைக்கள புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.குறித்த மாவட்டத்தில் செயல் படு மீனவர்களாக 4815 பேர் உள்ளனர். இம் மாவட்டத்தில் 72 கிலோ மீற்றர் நீளமுடைடய கடற்பரப்பும் 125 கிலோமிற்றர் களப்பு கரையோரமும் உண்டு. களப்பு கரையோரங்களாக கொக்குளாய், நாயாறு, சாலை, நந்திக் கடல் போன்ற பிரதேச ங்கள் உள்ளன. களப்பு மீன் பிடியில்ஈடுபடும் மீனவர்களிடம் 233 குள்ளாப் படகுகள் உள்ளன. இம்மாவட்டத்தின் 28 மீனவக் கிராமங்களிலும் 87 கரை வலை கள் அனுமதிக்கப் பட்டுள்ளது. இவ்வாறு கடல் தொழில் புரியும் மீனவர்களின் படகுத் தரிப்பிடங்களாக 28 நிலையங்கள் விளங்குகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் 27 மீனவர் அமைப்புக்களும் 04 கடற்றொழில் பரிசோதகர் பிரிவுகளும் உள்ளன. இம்மாவட்டத்தின் நீரியல் வளத்திணைக் கள அலுவலகத்தில் 10 பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.-முல்லைத்தீவு மாவட்டத்தில் 2015ஆம் ஆண்டில் மொத்த கடல் உற்பத்தியாக 925,1146 கிலோ கிராம் மொத்த உற்பத்தி பெறப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நம்பிக்கை ஒளி
Ray of Hope
தாயக மண்ணில் வேரறுந்து உறவிழந்து யாருடைய உதவியுமின்றி அல்லலுறும் எமது உறவுகளுக்கு லண்டன் நம்பிக்கை ஒளி நிறுவனம் பலதிட்டங்களின் மூலம் உதவிகள்புரிந்து வருவது நீங்கள் அறிந்ததே! லண்டன் நம்பிக்கை ஒளி நிறுவனத்துடன் இணைந்து எம் உறவுகளுக்கு உதவ உதவிக்கரம் நீட்டிடுவீர் மேலதிக விபரங்களுக்கு எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள்.
Tel. 02086179343. Email-roh@theroh.org
Bank – Barclays
Account Name-Ray of Hope people
Account Nummer-4364134
Sort code-20 92 60

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்காலும் முடிவுறா போராட்டமமும்

ஏழு ஆண்டுகளின் முன் ஆயுதப் போராட்டத்தினை அழித்தொழித்து பல்லாயிரம் உயிர்களைக் காவு கொண்டு உயிர் பிழைத்தவர் களை காட்டு மிராண்டித் தனமான பல்வேறு வன்கொடுமைகளுக்கும் உள்ளாக்கியதன் மூலம் சிங்கள தேசம் தமிழர்கக்கு ஒரு செய்தியையும் உலகிற்கு வேறொரு செய்தியையும் கூற முனைந்தது. எதிர் காலத்தில் தமிழ் மக்கள் தனி மனிதராக எந்த விதமான எதிர்ப்பினையும் நினைத்துப் பார்க்கவோ அல்லது முயற்சி செய்யவோ முனைந்தால் என்ன நடக்கும் என்ற குரூரமான உண்மை பயங்கர மான முறையில் செய்து காட்டப்பட்டது. அத்துடன் ஒரு குழுவாகவோ சமூகமாகவோ எந்த விதமான எதிர்ப்பியக்கத்தியும் உரு வாக்க முனைந்தால் அதன் விளைவுகள் எப்படி அமையும் என்பது இரத்தத்தின் மூலம் எழுதிக் காண்பிக்கப்பட்டது. இதனை அனைத்துலக சமூகமும் கண்டு கொள்ளாது என்பதனையும் சிங்கள தேசம் நிரூபித்துக் காட்டியது. சிறிய எண்ணிக்கையான மக்களக் கொண்ட ஒரு தேசிய இனம் தன்னை விட பல மடங்கு எண்ணிக்கையுடைய ·தேசிய இன த்துடன் மோதினால் இதுதான் முடிவு என்று ஒரு கொடிய வரலாறு துடிக்கப் படைதக்க தமிழர்களின் இரத்தத்தினால் வரையப்பட்டது. இதனைத் தடுத் து நிறுத்துவோம் என்று 2008இல் கிளர்தெழுந்த புலம் பெயர் தமிழர்களின் போராட்டங்கள் காலம் தாழ்த்தி தொடங்கிய ஒன் றாக முடிவடைந்தது. அடிப்ப டையில் நாம் சொல்ல முனைந்த செய்தி 'இது ஒரு பயங்கரவாதப் போராட்டம் அல்ல மாறாக தமிழ் மக்கள் தம் அரசியல் உரிமைக் கான இன்னொரு போராட்ட வடிவம் என்று கூற முனைந்தோம் போராடிய தமிழ் மக்களை படு கொலை செய்வது நிறுத்தப்பட வேண்டும்' என்று கூறினோம். ஆனால் எல்லாமே காலம் கடந்த ஒன்றாக தாமதமாக ஆரம் பிக்கப்பட்ட மீட்பு நடவடிக்கையா க அமைந்து விட்டது. உலகின் மிகப் பெரும்பான்மை மக்கள் காதில் நாம் சொல்ல வந் த செய்தி சென்றடையவில்லை. அதன் பலன் இன்றுவரை தொடர் கின்றது. அவலத்தின் சுவடுகள் காலம் காலமாகத் தொடரத்தான் போகின்றது. 2000ஆம் ஆண்டிலேயே சிறிய எண்ணிக்கையுடைய ஒரு இனம் தன்னை விடப் பெரிய எண்ணிக் கையான இனத்தை எதிர்த்து ஆயு தப் போராட்டத்தின் மூலம் தான் அடையக் கூடிய அதி உச்ச எல்லையினை அடைந்தது. இரண் டு நிலப்பரப்பு, இரண்டு நிர்வாகங் கள், இரு வேறு படையணிகள் என்று வலிமையானதொரு நடை முறை அரசு (de facto state) ஆக உருவெடுத்த யதார்த்தம் அன்று இருந்தது. அதனை ஈடு கட்டும் அரசியல் ராஜதந்திர நட வடிக்கைகளை புலம்பெயர் சமூகம் திட்ட மிட்ட அடிப்படையில் மேற்கொண்டிருந்தால் சர்வதேச அங்கீகாரத்தினை பெற்று எம் அர சியல் அபிலாசைகளை வென்றெடு த்திருக்க முடியும். இவ்வளவு அற்புதமான உயிர்களைப் பலி கொடுத்திருக்க மாட்டோம். நாம் நேசித்த தோழர்களை இழந்திருக்க மாட்டோம். விடுதலைக்காக அர்ப் பணித்த தியாகங்களை அர்த்த முள்ளதாக மாற்றியிருந்திருப் போம். அன்று நடந்தவை நடந்து முடிந்து விட்டது. எம் கனவுகள் நனவுகள் ஆகாமல் சிதைக்கப் பட்டது. எதிர் பார்ப்புகள் தகர்க்கப்பட்டது. ஆயினும் யதார்த்தம் என்பது கசப்பானது. போராட்டத்தில் நம்பிக்கையிழந்து ஒதுங்கிய பல்லாயிரக் கணக்கானோர் மத்தியில், இனி ஒன்றும் சாத்தியமில் லை எதிரியின் காலடியில் விழுவோம் என்று புறப்பட்ட மேதாவிகள் மத்தியில், சாய்வு நாற்காலி ஆய்வாளர்கள் இனி எதுவும் நடைபெறாது என்று எதிர்வு கூறிய நிலையில், வெளியுலகில் ஐ.நா மனித உரிமைக் கழகத்திலும் இலங்கைக்கு சாதக மான சூழல் உள்ளுரில் ஒவ்வொரு அங்குல நிலமும் இராணுவத்தின் பிடியில் மக்களைச் சிறையி ருத்தி வாய்திறக்க முடியாமல் தன்கண் முன்னாள் நடப்பவற்றினை கண்டு கொள்ளாது வெதும்பிய வாறு இருந்த சூழலில், பிரித்தா னிய தமிழர் பேரவை மட்டும் உறுதியாக நின்றது! விடுதலை வேள்வி தொடர வேண்டும் என்று சபதமெடுத்தது!. புதிய பரிணாம போராட்ட வடிவத்தினை தேர்ந் தெடுத்தது. அப்போராட்ட வடிவத்தின் சில்லும் அச்சாணியுமாக தன்னை மாற் றியமைத்துக் கொண்டது. தேசம் பற்றிய கனவுகள் நிரந்தர மாகக் கனவுகளாகவே மாறி விடா து கனவு மெய்ப்பட வேண்டும் என்று இரவும் பகலும் ஓய்வில் லாது அயர்வு தளர்ச்சியின்றி செயல்பட்டது. எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் சென்று இனப்படு கொலைகளுக்கு நீதி கோரியது. உலகின் மனச்சாட்சி மீது நம்பிக் கைவைத்து செயல்பட்டது. அசைக்க முடியாத சக்திகளை அசைத் தது. வாய் மூடி மௌனியாய் இருந்தவர்களை வாய் திறந்து பேசவைத்தது. கையில் ஆயுதங்க ளின்றி நிராயுதபானியாக நின்ற மக்களை நம்பிக்கையூட்டி மாபெ ரும் சக்தியாக எழுச்சி பெறவை த்தது. புலம்பெயர் மக்கள் நாங்க ள் இருக்கின்றோம்! உலகம் மீண்டும் உங்களைக் கைவிடாது பாது காப்போம் என்று உறுதி யளித்தோம். சொன்னது மட்டு மல்லாது செயலில் காட்டினோம். விடுதலை வேண்டும் புதிய கட்ட மைப்புகள் உருவான போதெல் லாம் அவற்றி னை அரவணைத்து பேணிப் பாதுகாத்தது. எவர் செயல்படாது விட்டாலும் எவ்வெப்போது தொய்வும் பின்னடைவும்வந்த போதெல்லாம் தன்முனைப்பான செயல்பாடுகளால் புதிய பரிணாம போராட்டத்தி னை முன்னோக்கி இழுத்துச் செல்லும் என்சின் வண்டியாக செயல்பட்டது. அனைத்து புலம் பெயர் கட்டமை ப்புகளும் சனநாயகம், வெளிப்ப டைத் தன்மை, பொறுப்பு கூறல், சட்டத்திற்குட்பட்ட செயல்பாடுகள், கலந்து பேசி கூட்டாக முடிவெடுத்தல் பரஸ்பர மரியாதை போன்ற விழுமியங்களை முன்வைத்து செயல்பட வேண்டும் என்று 28-06-2009 வெளியிட்ட அறிக்கையில் கோரியிருந்தோம். 2009 இற்குப் பின் உருவாகிய பெரும் பான்மை யான அமைப்புகள் மேற்படி விழுமியங்களை ஏற்றுக் கொண்டு செயல் படுவதாக மக்களுக்கு உறுதியளித்தன.













noolaham.org | aavanaham.org

# தொடரும் கலாச்சார இனவழிப்பு தமிழர்
## தாயகத்தில் புதிதாய் முளைத்தெழும்
# பௌத்தசின்னங்கள்



**Mathakal**
Jaffna District



**Navathkuli - Karativu - Mannar Highway**
Thirukketheeswaram

கடந்த காலங்களில் தமி ழர் தாயகம் தொடர்பான பல காத்திரமான ஆய்வு தொகுப்புக்ளை பிரசுரித்துள்ள பிரித்தானிய தமிழர் பேரவை நடைபெறும் ஐ நா மனித உரிமைக்கழக 32ஆம் கூட்டத் தொடரில் கையளிக்கவென புதிய ஒரு ஆவணத்தை தயாரித்துள்ளனர். 2009அம் ஆண்டின் பின் தொடரும் இராணுவ ஆக்கிரமிப்பின் பன்முகப் படுத்தப்பட்ட விளைவுகளையும் குறிப்பாக சிறிதும் பெரிதுமாக புதிதாக கட்டியெழுப்பப்படும் பௌத்த சின்னங்கள் மற்றும் விகாரைகள் பற்றிய தொகுப்பு ஒன் றும் இதில் உள்ளடக்கப் பட்டுள்ளது. இலங்கை சுதந்திரம் பெற்ற கடந் த 68 வருட காலத்தில் ஏற்கெனவே எம் கிழக்கு மாகாண த்தின் பெரும் நிலப்பரப்பு கபளீகரம் செய்யப்பட்டு விட்டது இன்று அது தமிழர் பெரும் பான்மையை இழந்து விட்டது. அடுத்த கட்டமாக வட மாகாணத்தில் புதிய சிங்கள குடியேற்றங்களை உடனடியாகவும் எதிர்காலத்திலும் நிறுவுவதற்கான தார்மீக அடிப்படைகளை உருவாக்குவதில் சிங்கள அரச கட்டமைப்பு, ....இராணுவ ஆக்கிரமிப்பை பயன்படுத்தி வருகின்றது. பிரித்தானிய தமிழர் பேரவை நவீன தொழிநுட்ப வசதிகள் மற்றும் தாயகத்திலிருந்து தனக்குள்ள தொடர்புகளின் மூலமும் பெறப்பட்ட தகவல்களும் படங்களும் இவ் ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக 2009 அம் ஆண்டிலிருந்தான புதிய பௌத்த சின்னங்கள் பற்றிய தகவல்கள் இயன்றளவு திரட்டப்பட்டு இதில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணம் பல ஆண்டுகளாக சிங்கள பௌத்த மயமாக்கப்பட்டுள்ளதால் அங்கு தற்போதுள்ள பௌத்த சின்னங்கள் குறித்து மேலதிக விபரங்கள் பெறப்பட்டு உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. இதனால் தற்போது வெளியிடப்படும் தொகுப்பு வட மாகாணத்தை மையப்படுத்தியுள்ளது. தொல்குடி மக்கள் தங்கள் கலாச்சார மதிப்புகள் அல்லது பாரம்பரிய இன அடையாளங்களை தனித்துவமாகப் பேணிப் பாதுகாத்து வரும் உரிமையுடையவர்கள். 2009 இந்த பின்னர் பொதுவாகவும் 2015 ஜனவரி ஆட்சி மாற்றம் வந்ததின் பின் குறிப்பாகவும் முளைத்தெழும் இப் பவுத்த சின்னங்கள் தொடரும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை அம்பலப்படுத்துகிறது. ஒரு இனத்தின் தனித்துவத்தை உருக்குலைத்து அவர்களின் மரபு வழி தாயகத்தில்



**Kilinochchi**
A9 - Kandy - Jaffna Highway



**Vadduvakal**
Mullaitivu District

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Paranthan**
A9 - Kandy - Jaffna Highway



**Talaimannar**
Medawachchiya - Talaimannar Highway



**Puthukkudiyiruppu**
Mullaitivu District



**Jaffna**
Stanly Road



**Kokkilai**
Mullaitivu - Kokkilai Road



**Thirukketheeswaram**
Mannar District



**Kanakarayankulam**
A9 Road Kandy - Jaffna Highway



**Mankulam**
A9 Road Kandy - Jaffna Highway



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Parayanaalankulam** - Mannar District



**Naayaru** - Mullaitivu District



**Thalaimannar** - Mannar District



sri-suwarna-vimbaramaya-vihara

**Santhipuram** - Mannar District

8ம் பக்கதொடர்சி

அரச முனைப்புடனான குடியேற்றங்களை உருவாக்க முயலும் சதித்திட்டங்களை இவ்வாறான ஆவணங்கள் சர்வதேச சமூகத்திற்கு கொண்டு செல்வது ஒரு காத்திரமான முயற்சி. இது தொடர்பான ஆய்வு முயற்சிகளுக்கு உதவ விரும்பும் தாயத்திலும் புலம்பெயர் நாடுகளிலுமுள்ள மக்கள் தம்மைத் தொடர்பு கொள்ளுமாறு பிரித்தானிய தமிழர் பேரவையினர் வேண்டுகோள் விடுக்கின்றனர் இவ் ஆவணத்திலிருந்து பெறப்பட்ட படங்களில் சில இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.



**7th Artillery Army Base** - Kilinochchi District




**Iyakachchi Army Camp**
**A9 Kandy - Jaffna Highway**



**Valvettithurai**
Jaffna District



**Kantharodai** Jaffna District



Front of **Thalladi** Army Camp - Mannar District

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலை தீர்வு அல்ல,,, தற்கொலை என்பது தோற்றுப்போன நம்பிக்கையின் மரணமே,,,



ந.லோகதயாளன்

கிளிநொச்சி மாவட்டத்தின் தற்கொலை வீதம் மீண்டும் சடுதியாக அதிகரிப்பது தொடர்பில் உள நல மருத்துவப் பிரிவினரும் தொண்டு நிறுவனங்களும் அதிக கவணம் செலுத்தவேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.இதன் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் யுத்தத்திற்கு பின்பு 2010 முதல் 2013 வரையும் தற்கொலைக்கான முயற்சிகளிற்கான வைத்தியசாலை அனுமதிகள்அதிகரித்திருந்தன. இருப்பினும் 20142015 ஆகிய ஆண்டுகள் சற்று குறைவடைந்திருந்த்து.

இவ்வாறு குறைவடைந்திருந்த தற்கொலை முயற்சியின் எண்ணிக்கை 2016ம் ஆண்டில் மீண்டும் அச்ச நிலைக்கு கொண்டு செல்வதுடன் இதனை கட்டுப்படுத்த ஓர் விசேட வேலைத் திட்டத்தினை உரிய திணைக்கள அதிகாரிகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் உளநல வைத்தியர்கள் உடன் கவணத்தில் கொள்ளவேண்டும் என கோரிக்கை எழுகின்றது.

இலங்கையின் வடக்கு,கிழக்கில் இடம்பெற்ற இறுதியுத்தம் காரணமாக அதிக இழப்புகள் காரணமாகவும், உறவுகளைத் தொலைத்தும், ஒப்படைத்தவர்களின் நிலை தெரியாமலும் ஒரு பகுதியினர் மன அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ள அதேநேரம் வீடு வாசல்களை இழந்தும்,சொத்துக்கள் , வேலை வாய்ப்புக்களை இழந்து இன்னுமோர் பகுதியினரும் மன அழுத்தங்களிற்கு உள்ளான நிலையில் அதில் இருந்து விடுபட்டு மீள முடியாமல் தற்கொலை என்னும் வாழ்க்கையின் இறுதி முடிவினை எடுக்கும். இறுகிய நெஞ்சம் கொண்ட முடிவிற்குச் செல்கின்றனர்.

. கிளிநொச்சி மாவட்டத்தில் நடப்பாண்டில் தற்கொலை முயற்சிகள் அதிகரித்த நிலையில் செல்வதனை மாவட்ட வைத்தியசாலை றபுள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டி நிக்கின்றது. அதன்பிரகாரம் 2016ல் ஜனவரி மாதம் 48 பேர் தற்கொலைக்கு முயற்சி ஒத்த நிலையில் அனுமதிக்கக்பட்டிருந்தனர். இந்த எண்ணிக்கை பெப்ரவரி மாதம் 28 ஆகவும், மார்ச் மாதம் 22 ஆகவும் காணப்பட்டதோடு ஏப்பிரல் மாதம் மீண்டும் அதிகரித்து 46ஐ தொட்டது. இவ்வாறு அதிகரித்த எண்ணிக்கையானது மே மாதம் 56 என்ற நிலையை தொட்டு இந்த ஆண்டின் முதல் 5 மாத்தினில் மட்டும் 200 என்ற அபாய இலக்கினை எட்டி ஓர் அபாய எச்சரிக்கையினை விடுத்துள்ளது. இவ்வாறு தற்கொலைக்கு முயன்றவர்களில் ஒரு சிலர் மட்டுமே காதல் விவகாரமாக உள்ளபோதிலும் அநேகரின் முயற்சிக்கு குடும்ப வறுமையே பிண்னணியாகவும் மேலும் சிலரின் முயற்சிக்கு யுத்தத்தின்போது குடும்ப உறவினை இழந்தமையினால் ஏற்பட்ட மனத்தாக்கமே முக்கிய இடம் வகிப்பதாகவே உள்ளது.

இவ்வாறு தற்கொலைக்கு முயன்று வைத்தியசாலையின் முயற்சியினால் உயிர்காக்கப்பட்ட விசுவமடுவைச் சேர்ந்த 63 வயது மூதாட்டியை அனுகி அவரின் தற்கொலைக்கான காரணத்தினை அறிய அவரின் இல்லத்தினை தேடிச் சென்றேன். அவரின் பெயரும் வைத்தியசாலையில் அறிந்த முகவரியின் உதவியுடன் கிராமசேவகர் ஊடாக ஒருவாறு மூதாட்டியின் இல்லத்தினை பகல் 11.40 அளவில் அடைந்தேன். குறித்த நேரம் சென்றபோத அருகில் இருந்த மற்றுமோர் மூதாட்டியே இவரை இனம் காட்டினார்.

அங்கு சென்ற சமயம் நகண்ட காட்சி எந்த கல் நெஞ்சத்தையும் உருக்கும் நிலமையே இருந்த்து. அதாவது அங்கிருந்த்தை வீடு என்பதால் அல்லது மாட்டுத் தொழுவம் என்பதால் என்று எழுதுவது என்பதே சற்று சந்தேகமான விடயமாகவே உள்ளது. அதனுள் மூதாட்டயை தேடினேன். அருகில் நின்ற ஓர் ஆட்டுக் குட்டிக்கு தீனி வைத்தவாறு நின்றார். குரல் கொடுத்து அழைத்தேன். எனது அருகில் வந்த மூதாட்டி நான் சென்றதன் காரணத்தை கேட்டபோது . அருகில் இருந்த ஓர் மரக்குற்றியினை காண்பித்து அமருமாறு கூறினார். அதில் இருந்து வினாவினேன். தனது குடும்ப நிலமையை முதலில் கூறத் தொடங்கினார். திருமணம் ஆகி நான்கு பிள்ளைகளுடன் வாழ்ந்த வேலையிலேயே 1997இல் இடம்பெற்ற விமானத்தாக்குதலில் உயிரிழந்தார் அதன்போது மூத்த பிள்ளைக்கு 13 வயது கடைசிப் பிள்ளைக்கு 4 வயது. எனக்கு 41 வயது. இந்த சூழலில் எனது நான்கு பிள்ளைகளையும் வளர்க்க பலரிடமும் கையேந்தி இறுதியில் ஓர் பிள்ளையை பாரதி இல்லத்திலும் மற்றொரு பிள்ளையை குருகுலத்திலும் விட்டு கற்பித்ததோடு வழங்கல் பகுதியின் சமையல் கூடத்தில் 2000ம் ஆண்டு முதல் 2007ம் ஆண்டு வரைக்கும் நான் சமையல் வேலைக்குச் சென்றேன். இதனால் எனக்கு ஆரம்பத்தில் 7 ஆயிரத்து 500 ரூபா கிடைத்தது. பின்னர் இறுதக் காலத்தில் 10 ஆயிரம் ரூபா சம்பளம் கிடைத்தது. இதன் மூலம் எனது குடும்பத்தை கொண்டு சென்றேன். இந்தக் காலத்தில. எனது மூத்த மகன் இயக்கத்தில் இணைந்து விட்டான். இதன் பிறகு ஏனையகல்வியை கவனித்வாறு வேலையைசெய்து வந்த வேளையில் இறுதி யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து ஓடி ஓடிக் கலைத்து இறுதியில் மாத்தளன் பகுதியில் கப்பல் றோட்டில் தறப்பால் கட்டி இருந்தோம் சித்திரை மாதம் 13 ம் திகதி என நினைக்கின்றேன் எங்கிருந்தோ வந்து வீழ்ந்த செல் ஒன்று என்னைக் காயப்படுத்தியதோடு எனது கடைசிப் பிள்ளைகள் இரண்டினது உயிரையும் எடுத்துக் கொண்டது. இதனால் நான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன் எனது இரண்டாவது பிள்ளையான மகளே என்கூட நின்றால் மூத்த மகன்போராளியாக இருந்து சித்திரை மாதம் 19 ம் திகதி என்னை வந்து பார்த்து அம்மா நீங்கள் தங்கச்சியை அழைத்துக் கொண்டு பாதுகாப்பாக செல்லுங்கள் நான் எப்படியும் வருவேன் அம்மா என்றான். அடுத்த நாள் காலையில் 6.மணியளவில் இராணுவம் வைத்தியசாலைப் பிரதேசம்மீது தாக்குதல் நடாத்தி தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர். அந்த நேரம் நானும் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் எனது மகளுடன் வந்தேன். இவ்வாறு வந்த நான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மீண்டும் முகாமில் மகளுடன் விடப்பட்டேன். இருப்பினும் எனது மகன்வரவே இல்லை. இராணுவப் பிரதேசத்திற்குள் வரும்போது கண்டதாக பலரும் கூறியபோதும் எனது மகனை இன்றுவரை கானவே இல்லை. இந்த நிலையில் கடந்த 2012ம் ஆண்டு எனது மகள் திருமணம் செய்து கொண்டாள். கணவர் சந்தையில் மரக்கறி விற்பனை செய்பவர் தற்போது அவளுக்கு இரு குழந்தைகள் உண்டு. கணவரோ குடிகாரன் என்னால் அவர்கள் குடும்பத்தில. சண்டைகளும் சச்சரவும் எழவே நான் மீண்டும் இங்கே வந்து விட்டேன். எனக்கு விதானையார் தார காசும் இந்த இரண்டு ஆடுகளுமே சொந்தம். தனி ஆளுக்கு. வீடு இல்லை என்று கூறிவிட்டனர். . இதனால். தெரிந்தவர்களிடம் ஏதாவது வேலை செய்தால் சாப்பாடு அல்லது எங்காவது கோயில் குளத்திலதான் நல்ல சாப்பாட்டத் தேடவேண்டியுள்ளது. எத்தனை ஆயிரம் பேருக்கு சமையல் செய்த எனக்கு ஒரு வேளை சோற்றுக்கே இன்று எனக் கூறியவர் கண் கலங்கி அழுத்தோடு தம்பியான நேற்று மதியம் பாண் சாப்பிட்டதற்குப் பிறகு ஒண்டுமே இல்லையடா என்றார்.அதன்மேல் அவரின் நிலையை அறிய விரும்பாத நான் அந்த மூதாட்டியிடம் சிறு பணத்தைக் கொடுத்தபோது அந்த மூதாட்டி கூறிய விடயம் என்னை தலை குனிய வைத்தது. இன்று ஆயிரம் ரூபாவை நீ தருவாய் பிறகு நான் எவர் கையப் பார்ப்பது. இரவில் படுத்தால் நித்திரையில் எனது பிள்ளக்கள் வந்து அழுது கூப்பிடுவது போன்றே உள்ளது இதனாலேயே போவோம் என மருந்தைக் குடித்தேன் அதில்கூட நான் தோற்று விட்டேன். என்றார். எனவே இவ்வாறு தனிமையின் கொடுமை உள்ளிட்ட காரணங்களால் சாவினைதேடி ஓடும் உள்ளங்களிற்கு வாழும் இந்த உயர்ந்த உள்ளங்கள் ஆற்ற உள்ள பணி என்ன என்ற கேள்வி எல்லோர் முன்னிலையிலும் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானிய தமிழர் பேரவை அரசியல் பரிந்துரைப்பு செயல்பாடுகள்



கேள்வி1– தமிழ் மக்களின் விடுதலைப் பேராட்டத்தினை அழித்தொழிப்பதில் உலக நாடுகள் ஓரணியில் நின்றன. குறிப்பாக பிரித்தானியா 2009 இன அழிப்பினைத் தடுத்து நிறுத்தத் தவறியது மட்டுமல்லாது ஸ்ரீலங்காவிற்கு ஆயுதங்கள், தொழிநுட்ப உதவி மற்றும் பயிற்சி வழங்கியது. அதே பிரித்தானியாவிடம் தமிழர்கள் எதனை எதிபார்க்க முடியும்?

பதில்–நாங்கள் – பிரித்தானிய தமிழர் பேரவை (BTF) பிரித்தானியாவை நியாயப்படுத்தவில்லை. பிரித்தானியாவின் பாரிய தவறுகளில் ஒன்று அவர்கள் தமிழர்களின் முப்பது வருட கால அரசியல் போராட்டத்தையும் அதன் பின்னர் மேற்கிளம்பிய ஆயுதப் போராட்டத்தையும் ஒட்டு மொத்த விடுதலைப் போராட்டத்தையுமே புரிந்து கொள்ளாத தவறினர். இந்த இடத்தில்தான் நாங்கள் பிரித்தானியாவின் வெளிவிவகாரக் கொள்கையை உற்றுநோக்க வேண்டிவர்களாக இருக்கிறோம். பிரித்தானியாவின் வெளிவிவகாரக் கொள்கையை எடுத்து நோக்கினால் அது அடிப்படையிலேயே சிறிலங்கா அரசுக்கு ஆதரவான ஒன்றாகவே இருந்தது.இதனால்தான் 2008,2009 காலப்பகுதியில் பிரித்தானிய நாடாளுமன்றத்திற்கு வெளியில் நாங்கள் லட்சக்கணக்கில் திரண்டு போராடியும் கூட எங்களின் மக்களை காப்பாற்ற முடியாமல் போனது. பிரித்தானியாவில் மட்டுமல்ல, பல ஐரோப்பிய நாடுகளிலும் எங்களுடைய மக்கள் மாதக்கணக்கில் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் என்ன நடந்தது? இறுதியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அழித்தொழிக்கப்பட்டனர். இவ்வாறானதொரு சூழலிலும் கூட, பிரித்தானியா மற்றும் ஏனைய பல நாடுகள் சிறிலங்காவிற்கு ஆதரவான நிலைப்பாட்டையே எடுத்திருந்தன. ஆனால் இன்றுஇ இந்த நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பிரித்தானிய பிரதமர் மற்றும் வெளிவிவகாரக் கொள்கைக்கு பொறுப்பான அதிகாரிகள் ஆகியோர் சிறிலங்காவில் இடம்பெற்றது போர்க் குற்றங்களென்றும் அது தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணையொன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் ஐ.நாவில் தொடர்ச்சியான அழுத்தங்களை கொடுத்து வருகின்றனர். இது எப்படி சாத்தியப்பட்டது?

சிறிலங்கா அரசின் பரப்புரைக்கு அமைவான கதிர்காமர் போன்றவர்களை இங்கு அனுப்பி சிறிலங்கா அரசாங்கம் பயங்கரவாதத்திற்கு எதிராகவே போராடி வருகின்றது. சிறிலங்காவை எதிர்த்து வெளிநாடுகளில் போராடுகின்ற மக்கள் அனைவரும் பயங்கரவாத ஆதரவாளர்கள் என்றவாறான பிரச்சாரங்களை பிரித்தானியாவும் நம்பியது. இதன் விளைவா சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டையே பிரித்தானியா எடுத்திருந்தது. 2009 யூன் மாதத்தில் இடம்பெற்ற ஐ.நா.கூட்டத்தொடரில் சிறிலங்காவிற்கு பாராட்டுத் தெரிவிக்கும் வகையில் பிரேரணை ஒன்றும் கொண்டுவரப்பட்டிருந்தது. ஆனால் அன்று மேற்படி பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்திருந்த அதே நாடுகள்தான் இன்று 2016இல் சிறிலங்காவில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் சுயாதீன விசாரணை தேவையென்று கூறுகின்றன. இது எப்படி நடந்தது? இவைகள் ஒரு சில நாட்களில் அல்லது சில மாதங்களில் இடம்பெற்று விடக் கூடிய விடயங்களா? 2009 மேக்குப் பின்னர் பிரித்தானிய தமிழர் பேரவையை பொறுத்தவரையில் பிரித்தானிய வெளிவிவகாரக் கொள்கையை தமிழர் சார்ந்து மாற்றியமைப்பதற்கான வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கத் திட்டமிட்டிருந்தது. ஏற்கனவே தாயகத்திலுள்ள எங்களுடைய மக்களுக்காக வீதிகளில் இறங்கி போராடிய போதிலும் அவர்களை காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. ஆனால் அதன் பின்னர் எங்களுடைய மக்களுக்கான நீதியை நிலைநாட்டுவதற்கான செயற்பாடுகளை சாதுரியமாக முன்னெடுக்க வேண்டுமென்று எண்ணினோம். அந்த வகையில் தொடர்ந்தும் போராடி வருகின்றோம். பிரித்தானிய வெளிவிவகாரக் கொள்கையை எங்களுக்கு ஆதரவாக மாற்றுவதற்கான வேலைத்திட்டங்கள் தொடர்பில் சிந்திக்கத் தலைப்பட்டோம். அதில் மாற்றங்கள் ஏற்படாமல் எந்தவொரு விடயத்தையும் முன்னெடுக்க முடியாது



கேள்வி2

மேற்குலகு 2009 இற்குப் பின் முன்னையராஜபக்ச அரசிற்கு கடும் அழுத்தங்களை கொடுத்து சர்வதேசத்தின் பார்வையை செறிவாகக் குவித்து சிறிலங்கா அரசினைத் தனிமைப்படுத்தியது. ஜெனீவாவிலுள்ள ஐ நா மனித உரிமைக் கழகத்தில் தீர்மானத்திற்கு மேல் தீர்மானங்களைக் கொண்டு வந்து நெருக்குதலைப் போட்டது. இதில் புலம் பெயர் மக்களினதும் அமைப்புகளினதும் பங்கு கேள்விக்குரியது அல்லவா? புலம் பெயர் தமிழர்களின் பங்கு எதுவும் இல்லாமலேயே அமெரிக்காவும் ஏனைய மேற்குலகும் இதனைச் சாதித்திருப்பார்களே?

பதில்–புலம்பெயர் மக்களுடைய தொடர்ச்சியான நடவடிக்கைகள்தான் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சிறிலங்காவிற்கு எதிரான நிலைமை உருவாகியது. எங்களுடைய தொடர்ச்சியான நன்கு திட்டமிடப்பட்ட பல்வேறு விதமான அரசியல் ராஜதந்திர நடவடிக்கைகளே அதற்கான உந்துதலாக அமைந்தது. 2009 மே மாதத்திற்கு பின்னர், தமிழ் மக்களின் எதிர்காலம் என்பதே ஒரு சூனியமாக இருந்தது. ஒரு மிகப் பெரிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த தமிழ் மக்கள் 2009இல் ஒரு பேரழிவை சந்தித்த போது அவர்களின் மனநிலை எவ்வாறிருந்திருக்குமென்பதை நாங்கள் ஒரு முறை மீளாய்வு செய்து பார்க்க வேண்டும். தாயகத்திலுள்ள மக்கள் அனைவரும் ஒரு கைதி போன்றும் புலம்பெயர்ந்து வாழும் மக்கள் மத்தியில் அடுத்தது என்னவென்று சிந்திக்க முடியாதளவிற்குமே அன்றைய நிலைமையிருந்தது. இச் சூழலில்தான் பிரித்தானிய தமிழர் பேரவை ஒரு குழுவை நியமித்து அதனுடைய பணிகளை ஆரம்பித்திருந்தது. அன்றைய சூழலில் எங்கள் முன்னாலிருந்தபிரதானபணிமுதலில்எங்களுடைய மக்களை தோல்வி மனப்பாண்மையிலிருந்து மீட்டெடுத்தலும் நாங்கள் எதிர் கொண்ட பாரிய பின்னடைவிலிருந்து கற்றுக்கொண்டு முன்னோக்கி பயணிப்புதற்கான செயற்பாடுகளை இனங் காண்பதாகவும் இருந்தது. இந்த அடிப்படையில் இரண்டு முகங்கிய விடயங்கள் தொடர்பில் நாங்கள் கவனம் செலுத்தியிருந்தோம். ஒன்று, ஐக்கிய நாடுகள் சபையை கையாளுவதற்கான ஒரு நிரந்தரக் குழு் அடுத்தது, நாம் வாழும் நாடான பிரித்தானிய அரசின் வெளிவிவகாரக் கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான விசேட குழு ஒன்றை உருவாக்குவது. இதன் விளைவுகள் தாயகத்திலிருந்த மக்கள் மத்தியிலும்நம்பிக்கையை ஏற்படுத்தியது.விடயம் இத்துடன் முடிந்துவிடவில்லை என்றவாறான உத்வேகம் அவர்களுக்குள் ஏற்பட்டது. சர்வதேசத்தின் பார்வையை நாம் அவர்கள் மீது குவிய வைத்தோம். அவர்கள் வெளியில் வரவும் போராடவும் கூடிய சூழல் உருப்பெற்றது. இன்றுராஜபக்ச தொடர்பில்அமெரிக்காவும்பிரித்தானியாவும் பேசிவருகின்றது. ஆனால் இந்த விடயத்தை சற்று ஆழமாக பார்ப்போமானால் இன்று ராஜபக்சவை எதிர்த்து பேசும் அல்லது விமர்சிக்கும் பல நாடுகளின் தலைவர்களும், ஆட்களும் இதே ராஜபக்சவுடன் கைகுலுக்கிக் கொண்டு அவருடன் விருந்துண்டு மகிழ்ந்தவர்கள்தான். ஒரு சில தமிழர்கள் கூட சிறிலங்காவிற்கு சென்று ராஜபக்ச குடும்பத்துடன் விருந்துண்டு அங்கு ஒரு பிரச்சினையும் இல்லையென்றவாறு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



12ம்பக்கதாடர்ச்சி

நற்சான்றிதழ் வழங்கியவர்கள்தான். ஆனால் இன்று ஏன் அதே ராஜபக்ச வேண்டாதவராக இருக்கின்றார்? சர்வதேச அரசியலை எடுத்து நோக்கினால், ஒவ்வொரு நாடுகளும் அதன் வெளிவிவகார கொள்கையின் அடிப்படையில்தான் இயங்கி வருகின்றன. ராஜபக்ச தேவையில்லை என்னும் போது அங்கு இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு சிறிலங்காவின் மீது அழுத்தங்களை பிரயோகிக்கின்றன. ஒவ்வொரு நாடுகளும் தங்களுடைய நலனின் அடிப்படையில்தான் தங்களுடைய வெளிவிவகார கொள்கையை தீர்மானிக்கின்றன. எனவே நாடுகள் முற்று முழுதாக மனித உரிமைக் கண்ணோட்டத்தில் மட்டும் பிறிதொரு நாட்டின் மீது அழுத்தங்களை பிரயோகிக்குமென்று நாங்கள் எண்ணக் கூடாது. அப்படி மனித உரிமைகள் மட்டும்தான் முக்கியமென்னுமொரு நிலைமை இருந்திருக்குமானால்இ எங்களுடைய மக்கள் இவ்வாறானதொரு இன அழித்தொழிப்புக்கும் ஆளாகியிருக்கமாட்டார்கள். எனவே ஒவ்வொரு நாடும் தாங்கள் ஏற்கனவே வகுத்து வைத்திருக்கும் வெளிவிவகார கொள்கைக்கு மாறாக ஒரு நாட்டின் நிலைமைகள் இருக்கின்ற போதே அங்கு தலையீடு செய்ய முயல்வர். இந்த அடிப்படையில்தான் இலங்கை மீதான தலையீட்டை பார்க்க வேண்டும். அமெரிக்காவை பொறுத்த வரையில் விடயங்களை முற்றுமுழுதாக மனித உரிமைக் கண்ணோட்டத்தில் அவதானிக்கும் நாடல்ல ஆனால் பிரித்தானியா அப்படியல்ல. இலங்கை விவகாரத்தில் பிரித்தானியாவிற்கு இருக்கின்ற கடப்பாடு அமெரிக்காவிற்கு இல்லை. பிரித்தானியா ஒரு காலத்தில் சிறிலங்காவை ஆண்ட நாடு. ஆனால் அமெரிக்கா அப்படியல்ல. எனவே அமெரிக்கா இந்த விடயத்திலிருந்து வெளியேறினாலும் அல்லது தமிழ் மக்களுக்கு மாறான நிலைப்பாட்டை எடுத்தாலும் கூட பிரித்தானியாவால் அப்படி இலகுவாக இந்த விடயத்திலிருந்து வெளியேற முடியாது தமிழ் மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்க முடியாது. அமெரிக்காவில் தமிழ் மக்களின் எண்ணிக்கை குறைந்தளவிலேயே இருக்கின்றது. அதற்கு ஏற்ப அங்குள்ள ருளுவீயுஊ பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அதே வேளை BTF இங்கு பலவாறான அரசியல் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. இதே போன்று CTC கனடாவில் பணியாற்றி வருகின்றது. ஆனால் ஏனைய நாடுகளில் என்ன நடக்கிறது? இங்குள்ளது போல் ஏனைய நாடுகளின் முடிவெடுப் பவர்களையும் அரசியல் மையங்களையும் செல்வாக்கு செலுத்தக் கூடிய தமிழ் அமைப்புகள் வளர்ந்தால்தான் நாம் வலிமையான நடவடிக்கைகளை ‚ சர்வதேசம் எடுக்க வைக்க முடியும். இவ்வாறான விடயங்களை கருத்தில் கொண்டு சிந்தித்தால் புலம்பெயர் தமிழ் மக்களின் தொடர்ச்சியான செயற் பாடுகளின்றி சிறிலங்காவிற்கு எதிரான நிலைப்பாட்டை அமெரிக்காவோ, பிரித்தானியாவோ அல்லதுவேறுஎந்தவொருநாடுமேஎடுத்திருக்க முடியாது. அதற்கு வாய்ப்பே இல்லை. ஏனெனில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான தகவல்களை திரட்டுதல். அவர்கள் ரூலம் ஆதாரங்களை திரட்டுதல். அதற்கான தொடர்புகளை பேணிக் கொள்ளுதல் போன்ற பல்வேறு வேலைகளில் நான் ஏலவே குறிப்பிட்ட ரூன்று அமைப்புக்களும் தனிச் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருந்தன. அதற்காக ஏனைய அமைப்புக்கள் பணியாற்றவில்லையென்று நான் கூற வரவில்லை. பிரித்தானிய தமிழர் பேரவையை எடுத்துக் கொண்டால் British Tamil conservative, Tamils for Labour, Tamil Friends of LibDem ஆகிய அமைப்புக்களுடன் இணைந்து பல்வேறு அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். ஆனால் இப்படியான வேலைகளில் ஒரு விகிதம் கூட நம்பிக்கையில்லாத ஆட்களும் அமைப்புக்களும் இருக்கின்றன. அவ்வாறு கூறியவர்கள் கூட இன்று இலங்கை அரசாங்கம் செய்ய மறுக்கின்ற விடயங்கள் தொடர்பில் விமர்சிக்கின்றனர் ஆனால் அதே நபர்கள் அல்லது அமைப்புகள் சிறிலங்காவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அமெரிக்காவினாலும் பிரித்தானியாவினாலும் இணையனுசரனை வழங்கப்பட்ட ஐ.நா.பிரேரணையையும் கூட குற்றம்சாட்டிக் கொண்டுதான் இருந்தவர்கள். எங்கள் மீதும் குற்றங்களை சுமத்தினர். ஆனால் பிரேரணையில் இருக்கின்ற விடயங்களை கருத்தில் கொள்ளாமல் இருக்கின்றனர். இந்த பிரேரனை தரம்குறைக்கப்படுத்தான் (Water down) வெளிவந்தது. சிறிலங்காவிற்கு எதிரான ஒரு வலுவான பிரேரணையைத்தான் நாங்கள் எதிர்பார்த்திருந்தோம்.ஆனால்சிறிலங்காவினாலும்அதற்கு அனுசரனை வழங்கிய நாடுகளினாலும் அதன் காரம் குறைக்கப்பட்டுவிட்டது என்பது உண்மை. ஆனால் அந்தப் பிரேரணைதானே இன்று எங்களுக்கு முன்னால் இருக்கிறது! இன்று எல்லோருமே முழுமையான இராணுவமய நீக்கம் (De-militarization), காணி விடுவிப்பு பற்றி பேசுகின்றனர். ஆனால் வடகிழக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்ற வேண்டுமென்றும், பொறுப்பு கூறும் பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டுமென்றும், தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டுமென்றும் இந்த பிரேரணையில் கூறப்பட்டிருக்கிறது. இந்த விடயங்கள் கூட அமெரிக்காவினாலோ அல்லது பிரித்தானியாவினாலோ தானாகவே கொண்டு வரப்பட்ட விடயமல்ல. மாறாக நான் மேலே குறிப்பிட்ட ரூன்று நாடுகளில் பணியாற்றும் மூன்று அமைப்புக்களின் கூட்டுழைப்பினால் ஏற்பட்டதே! நாங்கள் ரூன்று நாடுகளில் சேர்ந்து பணியாற்றுவதன் ரூலம் இவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்த முடியுமென்றால் ஏனைய நாடுகளில் உள்ள அமைப்புக்களும் எங்களுடன் சேர்ந்து பணியாற்றினால்எவ்வளவுகாரியங்களைசாதிக்கமுடியும்? மேலும் கனடாவிலுள்ளயோர்க் பல்கலைக் கழகத்தில் ஒரு நிகழ்வில் கலந்து கொண்ட முன்னாள் மனித உரிமை கழக ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையார், புலம்பெயர் மக்கள் தாயகத்தில் இருப்பவர்களின் குரலை வெளிக் கொண்டு வர வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடுகின்றார். புலம் பெயர் மக்களால்தான் அங்கு நடந்த கொடுமைகளை சக்தி வாய்ந்த பல நாடுகள் மறைக்க முயன்றும் கூட தொடர்ந்தும் உலக அரங்கில் தொடர்ச்சியாக ஒலிக்க வைக்கக் கூடியதாக உள்ளது. நாங்கள் எங்களுடைய மக்கள் மீது மேற்கொள்ளப் பட்ட இன்ப்படுகொலையை நிரூபிக்கும் நோக்கில் பலவகையான உத்திகளை மேற்கொண்டு வரு கின்றோம். நாங்கள் ஒவ்வொரு விடயத்தையும் படிப்படியா கத்தான் முன்னெடுக்க முடியும். இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்கான ஒரு சுயாதீன சர்வதேச விசாரணை வேண்டுமென்று டேவிட் கமரோனைக் கூற வைக்க முடியும் என்றால் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டது இனப்படு கொலைதான் என்று சொல்ல வைப்பதற்கு தமிழ் மக்கள் முழு மனதுடன் முயன் றால் முடியாதா? எனவே இத னை முன்னெடுப்பதற்கு நம்பிக்கையும் திறமையான செயல் பாட்டாளர்களும் தேவை.

**கேள்வி 3 – பிரித்தானிய தமிழர் பேரவை தனிப்பட்ட கட்சிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பின்னால் நின்று மக்களின் உரிமைப் போராட்டத்தில் எதனைச் சாதிக்க முடியும்?**

பதில் – நீங்கள் கேட்டது போன்று இப்படியான கேள்வி களை எழுப்பும் அமைப் புகளும் தனி நபர்களும் எம் மத்தியில் உள்ளனர். அவர்களைப் பொறுத்த வரையில் இவ் வாறு பிரித்தானிய நாடாளு மன்ற உறுப்பினர்களுடனும் இங்குள்ள அரசசார அமைப் புகள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோருடன் உரையாடு வதால் என்ன பெரிதாக வந்துவிடப் போகின்றதென்று கேள்வி எழுப்புகின்றனர். இந்த அணுகுமுறை பிழையென்று கூறுவது அவர்களின் கருத்துச் சுதந்திரம். ஆனால் இதனை பிழையென்று கூறுபவர்களிடம் இருக்கின்ற மாற்றுத் திட்டம் என்ன? நாங்கள் போகின்ற பாதை பிழையென்று சொல் பவர்கள் தங்களிடம் இருக்கி ன்ற சரியான வழி பற்றியு மல்லவா கூற வேண்டும். பிரித்தானிய தமிழர் பேரவை இந்த நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கு பின்னால் திரிகின்றது கோட்சூட் போட்டுக் கொண்டு திரிகிறார்கள் என்றெல்லாம் சிலர் இங்குள்ள தமிழ் ஊடகங்களில் பேசிவருவதை காணக் கூடியதாக இருக்கிறது. ஆனால் இவ்வாறான குற்ற சாட்டுக்களை உன்னிப்பாக அவதானித்தால் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் ஒரு சில குறிப்பிட்ட தனி நபர்களினாலேயே முன்வைக்க ப்படுகின்றது. இவர்களைப் போன்று பிரித்தானியதமிழர் பேரவையும் தொலைக்காட் சிகளில் மட்டும் பேசிவிட்டு செயல்படாமல் இருந்திருக்கு மானால் சிறிலங்கா தொடர் பில் பிரித்தானியா இவ்வாறான தொரு நிலப்பாட்டை எடுத்திருக்குமா? எல்லோரும் அவரவது லேலைகளை பார் த்துக் கொண்டு அமைதியாக இருந்திருந்தால் சிறிலங்காவில் இடம்பெற்றிருக்கும் சர்வதேச சட்டத்தில் குறிப்பிட்ட குற்ற ங்கள் தொடர்பில் ஒரு சுயாதீன சர்வதேச விசாரணை வேண்டு மென்று பிரித்தானியா கோரக் கூடிய ளவிற்கான சூழல் கனிந் திருக்குமா? 2009.இற்கு முன்னரான நிலை மையை எடுத்து நோக்கினால் அப்போது 10 வரையான நாடாளுமன்ற உறுப் பினர் கள்தான் எங்களுடன் தொடர் பிலிருந்தனர். அதிலும் குறிப் பாக அவர்கள் அனைவரும் லண்டனில் தமிழ் மக்கள் செறிவாக வாழும் பகுதிகளை சேர்ந்தவர்கள். ஆனால் 650 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இருக்கின்ற நிலையில் மேற்குறிப்பிட்ட 10 பேரால் என்ன செய்து விட முடியும்?. 2008இ 2009 காலப் பகுதியில் அவர்கள் எங்களுக்காக பேசினார்கள். அன்று நாங்கள் மேற்கொண்டிருந்த போராட்டங்களில் அவர்களும் பங்குகொண்டு எங்களுக்காக குரல் கொடுத்திருந்தனர். அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பின்வரிசை உறுப் பினர்களாகவும் கட்சிகளில் முக்கிய பொறுப்புக்களில் இல்லாதவர்களாகவுமே இருந்த னர்.இதனால் அவர்களால் பெரி ய தாக்கங்களை ஏற்படுத்த முடியவில்லை. ஆனால் இன்றைய சூழலில் சில முக்கிய அமைச்சர்கள் உள்ளடங்கலாக நூற்றுக்கு மேற் பட்ட நாடாளு மன்ற உறுப்பினர்கள், எங்களுக் கு ஆதரவாக பேசி வருகின்றனர். தமிழர் களுக்கு நடந்தது 'அநீதியென்றும் அங்கு இடம்பெற்றது போர்க்குற்ற மென்றும் மேலும் அங்கு இடம்பெற்றிருப்பது ஒரு இனப் படு கொலையென்றும் கூட அழுத்தமாக கூறிவருகின் றனர் இது எப்படி





noolaham.org | aavanaham.org




13ம் பக்க தொடர்சி..

நடந்தது? பிரித்தானிய தமிழர் பேரவை மேற்கொண்டு வரும் தொடர்ச் சியான அரசியல் வேலைத் திட்டத்தின் ஒரு பகுதியாக இங்குள்ள நாடாளுமன்ற உறுப் பினர்களுக்கு எங்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் அறிவுறுத்தும் வேலையையும் முன்னெடுத்து வருகின்றது. இதே நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆரம்ப காலங்களில் எங்களுடைய விடுதலைப் போராட்டம் தொடர்பில் எதிர் மறையான, நிலைப்பாடுகளை யே கொண்டிருந்தனர். ஆனால் இன்று அவர்களில் சிலர் அங்கு நடந்தது இனப்படுகொலையென்று சொல்லுமள விற்கு மாறியிருக் கின்றனர். அவ்வாறானதொரு மாற்றம் ஏற்படுவதற்கான புறச் சூழலை பிரித்தானிய தமிழர் பேரவை ஏற்படுத்தியிருக்கின்றது. ஏனெனில் அவர்களுக்கு சரியான முறையில் எங்களுடை ய பிரச்சினைகள் போய்ச் சேர்ந் திருக்கவில்லை. கால காலமாக சிறிலங்கா அவர்களுக்குள் தங் களின்கருத்துக்களை...விதைத்திருக்கிறது அதனை நாங்கள் தோற்கடித்திருக்கிறோம். சிறிலங்காவின் முகத்திரையை கிழித்து அதன் நிஜமுகத்தை நாங்கள் அவர்களுக்கு காண் பித்திருக்கிறோம். உண்மையில் தமிழ் மக்கள் வாழ்ந்திராத பகுதிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட எங்களுக்கு ஆதரவான அணியில் இருக்கின்றனர். நாங்கள் அவர்கள் ஒவ் வொருவரையும் அணுகிப் பேசி எங்களின் பக்கமாக திருப்பியிருக்கிறோம். அவ்வாறான அனைவரது ஆதரவினாலும்தான் இன்று எங்களுடைய விவகாரம் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் ஒரு விடயமாக எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது. இதன் விளை வாகவே போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களை சிறிலங் காவிற்கு திருப்பி அனுப்பக் கூடாதென்று அங்கு விவாதிக்கப்படுகிறது. வடகிழக்கில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தை வெளியேற்ற வேண்டுமென்று அங்கு விவாதிக்கப்படுகிறது. போர்க்குற்றங்களுக்கான பொறுப்புக் கூறும் பொறிமுறை அவசியமென்று அங்கு விவாதிக்கப்படு கிறது. இவை எதுவுமே தானாக நடை பெற வில்லை. அந்த இயங்கு சக்தியை பிரித்தானிய தமிழர் பேரவை எம் மக்களுடன் இணைந்து பன்முகப்பட்ட வேளைத் திட்டங்களினூடாக அவர்களை இணைத்து வருகின்றது.

கேள்வி4– சிலர் BTF மீது சுமததும் குற்றச் சாட்டு தமிழரல்லாத அமைப்புகள் மற்றும் ஏனைய இனத்தவர் பின்னால் திரிகின்றார்கள். அவர்களா நம் உரிமையை பெற்றுத் தரப்போகின்றார்கள்? ஆனால் நீங்களோ தமிழரல்லாத மக்களின் ஆதர வினைப் பெற வேண்டும் என்கின்றீர்கள். உங்கள் அனுபவம் என்ன சொல்கின்றது?

பதில்– மூன்றாவது கேள்விக்குரிய பதிலின் இறுதிப் பகுதியில் இந்தக் கேள்விக்கான பதிலும் ஓரளவில் இருக்கிறது. இன்றைய பூகோள ஒழுங்கில் நாம் தனித்து நின்று தமிழர்களுக்காக போராடுவதன் மூலமாக மட்டும் நாங்கள் ஒரு விடிவை கண்டு விட முடியாது. கடந்த 7 வருட போராட்டம் இதனை உறுதிப்படுத்தும். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இருந்த காலத்தில் அங்கு ஒரு வலுச் சமநிலை நிலவியது. இன்று இலங்கையின் கை ஓங்கியிருக்கிறது. இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களை அங்கு அடிமையாக நடத்தி வருகின்ற சூழலில் சிறிலங்காவை மீறி தமிழர்களால் அங்கு எதனையும் செய்ய முடியாதவொரு நிலைமையே காணப்படுகிறது. இவ்வாறானதொரு சூழலில் எங்களுக்கு முன்னாலுள்ள தெரிவுகள் என்ன? சர்வதேச சமூகத்தின் ஆதரவில்லாமல் ஐ.நாவில் எந்தவொரு விடயமும் அரங்கேறாது. பிரித்தானியா எங்களுக்கு ஆதரவாக பேசினாலும் கூட ஏனைய பல நாடுகளின் ஆதரவு தேவை. அவர்களின் ஆதரவில்லாமல் அங்கு ஒரு விடயத்தை வெற்றி கொள்ள முடியாது. ஒரு உதாரணத்தை இந்த இடத்தில் குறிப்பிடலாம். நாடாளுமன்றத்தில் ஒரு விடயம் சட்டமாக்கப்பட வேண்டுமாயின் அதற்கு ஆதரவாக பெரும்பாண்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டும். இதே போன்றுதான் ஐ.நாவில் ஒரு விடயம் கருத்தில் கொள்ளப்பட வேண்டுமாயின் அதற்கும் அங்கத்துவ நாடுகளுக்கிடையிலும் வாக்கெடுப்பு நடக்கும். பல நாடுகளின் ஆதரவாக வாக்களித்தால்தான் ஒரு விடயம் நிறைவேறும். சில நாடுகள் வாக்கெடுப்பில் பங்கு கொள்ளாமலும் விடுவார்கள். நாங்கள் பல நாடுகளை சந்தித்து பல அரசுசாரா அமைப்புக்களுடன் பேசியதன் விளைவாகவே இன்று ஐ..நாவில் தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை மேற்படி நாடுகளும் அமைப்புக்களும் எடுத்திருந்தன. நாங்கள் வெறுமனே பிரித்தானியாவுடன் மட்டும் பேசிக் கொண்டிருக்கவில்லை. மாறாக தென்னமெரிக்காவிலுள்ள நாடுகள் பலவற்றுடனும் ஆபிரிக்க நாடுகள் பலவற்றுடனும் பேசியிருக்கின்றோம். பேசி வருகின்றோம். சிறிலங்கா தேசம்தான் எம் பொது எதிரி. எம் நீதிக் கோரிக்கைக்கு பல நாடுகளின் ஆதரவைத் திரட்ட வேண்டுமே தவிர நாடுகளை பகைத்தல் ஆகாது. ஜரோப்பிய நாடுகளிலுள்ள எங்களுடைய மக்கள் இதனை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் இவ்வாறான உயர்மட்ட சந்திப்புக்களில் ஈடுபடுகின்ற போது அவர்கள் எங்களிடம் கேட் கின்றனர் எங்களுடைய நாட்டில் வாழ்கின்ற உங்களது மக்கள் இது பற்றி எங்களுடன் பேச வில்லையே! ஏன்- என்று கேட்கின்றனர். போராட்டங்கள் முக்கியமானதுதான். வீதிகளில், நாடாளுமன்றங்களுக்கு முன்னால் எங்களுடைய மக்களை அணிதிரட்டி போராட்டங்களை முன்னெடுக்கத்தான் வேண்டும். ஆனால் அத்துடன் மட்டும் திருப்திப்பட்டுக் கொள்ள முடியாது. ஒருங்கிணைந்த ஒரு நுட்பமான அரசியல் ராஜதந்திர வேலைத்திட்டத்தை வடிவமைத்து அதனை கட்டமைப்பு ரீதியில் முன்னெடுக்க வேண்டும். ஆனால் இவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்ற போது இங்குள்ள ஒரு சில அமைப்புக்கள் எங்களுக்கு ஆதரவு தருவதில்லை. வெற்றுக் கோசம், வீராப்பு, கடந்த காலத்திலேயே உறைந்து போதல், தமிழ் மக்கள் தனிமைப்படுத்தப்படும் ஆபத்துக்கு தெரிந்தோ தெரியாமலோ துணை போதல் என்பன ஆபத்தான விளைவுகளையே கொடுக்கும். இன்றைக்கு நாங்கள் சமபலத்தை இழந்திருக்கின்றோம். இந்த நிலையில் எங்களுக்கு முன்னால் சர்வதேச சமூகம் மட்டும்தான் இருக்கிறது. அதனுடன் பணியாற்றுவதன் மூலம்தான் நாங்கள் இந்த சவாலை எதிர் கொண்டு முறியடிக்க முடியும். எங்களுடைய தொடர்ச்சியான செயற்பாடுகளின் ஒரு சிறு விளைவைத்தான் இன்று ஐ.நா வில் பார்க்கின்றோம். தான் அமுல்படுத்துவதாக ஏற்றுக்கொண்டிருக்கும் செப்டம்பர் 2015ஐநாபிரேரணையில்குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்களைக்கூட அமுல்படுத்த முடியாமல் இன்று சிறிலங்கா தடுமாறிக் கொண்டிருக் கின்றது. அதனை முழுமையாக அமுல்படுத்தாது இழுத்தடிப்பு வேலைகளை செய்து கொண்டிருக்கிறது. ஒரு தரம் குறைக்கப்பட்ட (watered down) பிரேரணையைக் கூட சிறிலங்காவினால் அமுல்படுத்த முடியா விட்டால் இனப்படுகொலைக்கு எதிரான நீதியை சிறிலங்கா எவ்வாறு உறுதிப்படுத்தப் போகிறது என்பதை சர்வ தேச சமூகம் சிந்திக்க வைக்க வேண்டும். எனவே நாங்களும் எங்களுடைய சகோதர அமைப்புக்களான USTPAC மற்றும் CTC ஆகியவை செய்வது போன்று உலகெங் கிலுமுள்ள அமைப்புக்களும் எங்களுடன் கைகோர்க்குமானால் சிறிலங்கா மீதான சர்வதேச பிடிகளை இன்னும் ஆழப்படுத்தவும் சிறிலங்காவின் இனப்படுகொலையை வெளியுலகிற்கு விரைவாக அம்பலப்படுத்தவும் முடியும். ஆனால் எங்கள் மத்தியிலுள்ள சில அமைப்புக்களும் தனிநபர்களும் இந்த விடயங்கள் மக்களைச் சென்றடையாமல் தடுத்து அவர்களிடையே பிழையான கருத்துருவாக்கங்களை செய்துவருகின்றனர். இது அவர்கள் செய்து கொண்டிருக்கிற மிகப் பெரிய தவறாகும். எனவே இந்த சந்தர்ப்பத்தில் எங்களுடைய மக்களுக்கு நாங்கள் சொல்லக் கூடியது ஒன்றே மக்களே இவ்வாறு உங்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்த முயல்பவர்களிடம் திரும்பி கேளுங்கள் நீங்கள் யார்? நீங்கள் என்ன செய்கிறீர்கள் உங்களின் வேலைத்திட்டம் என்ன?

அடுத்தஇதழில்தொடரும்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம்பெயர் சமூகம்:

# ஈழத் தமிழர்களின் சர்வதேச பலம்




கடந்த ஆண்டு சிறிலங்காவில் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தை நல்லிணக்கத்தின் வெற்றியாக காண்பிக்கும் முயற்சிகளில் கொழும்பின் ஆளும் வர்க்கம் தீவிரமாக செயலாற்றி வருகிறது. ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வுகளை இலங்கை மக்களது வெற்றியாக காண்பித்து சிறிலங்காவின் மீதான சர்வதேச அழுத்தங்களை முற்றிலுமாக இல்லாதொழிப்பதே கொழும்பின் இரகசிய நிகழ்ச்சி நிரலாகும். இதற்கு பின்னால் மைத்திரிபாலவின் சாந்தமான முகமும் ரணில் விக்கிரமசிங்கவின் தந்திரோபாய மூளையும் இருக்றறகிறது. அவர்களின் எதிர்பார்ப்பிற்கு அமைவாகவே சில நிகழ்வுகளும் நடந்தேறிவருகின்றன. ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து வீழ்ந்துகிடந்த சர்வதேச நன்மதிப்பை துக்கி நிறுத்துவதற்கான முயற்சிகளிலேயே கொழும்பு தீவிர கவனம் செலுத்தியது. மகிந்த ராஜபக்சவின் காலத்தில் சிறிலங்கா மேற்குலகின் ஆதரவை முற்றிலுமாகவே இழந்திருந்தது. மகிந்த ராஜபக்சவும் மேற்கின் ஆதரவை வெற்றிகொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு மாறாக, தன்னுடைய சீன சார்பைக் கொண்டு மேற்குடன் மோதும் ஒரு அரசியல் உபாயத்தையே தெரிவு செய்திருந்தார். மகிந்தவின் மேற்படி எதிர்ப்பரசியல் அணுகுமுறை சிறிலங்காவை மேற்கிலிருந்து முற்றிலுமாக தனிமைப்படுத்தியது. இவ்வாறானதொரு சூழலில்தான் பலமான கூட்டு முயற்சியின் விளைவாக, மகிந்தவின் ஆட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

மகிந்தவின் ஆட்சி முடிவுக்கு வந்ததன் பின்புலத்தில் நடந்தேறிய ஒவ்வொரு விடயங்களையும் உற்று நோக்கினால் கொழும்பின் புதிய கூட்டணி அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரலை தெளிவாக புரிந்துகொள்ள முடியும். எது அதுவரை சிறிலங்காவிற்கு நெருக்கடியாக இருந்ததோ அதை முற்றிலுமாக இல்லாதொழிப்பதே கொழும்பின் முதலாவது வேலைத்திட்டமாக இருந்தது. இதன் முதல் கட்டமாக ஜெனிவா பிரேரணைக்கு இணை அனுசரனை (Co-sponsorship) வழங்கி அமெரிக்கா தலைமையிலான சர்வதேச அழுத்தங்களின் வீரியத்தை குறைத்தது. இதன் பின்னர் சிறிலங்காவின் நன்மதிப்பு சடுதியாக அதிகரித்தது. தொடர்ச்சியான அமெரிக்க உயர் மட்டத்தினரின் விஜயமும், மேற்குலகுடனான ஊடாட்டங்களும் உலக ராஜதந்திர சமூகத்தினரின் மத்தியில் சிறிலங்காவின் இடத்தை மீளவும் உறுதிப்படுத்தியது. இதன் உச்சமாகவே மைத்தரிபால, G-7 நாடுகளின் தலைவர்களின் ஆசிர்வாதத்தை பெற்றிருக்கிறார். சர்வதேச பரப்பில் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் கொழும்பின் புதிய கூட்டணியானது, சிறிலங்காவிற்குள் தமிழ் தேசியக் கூட்டமைப்பை கையாளும் அரசியலையும் ஒருங்கே முன்னெடுத்து வருகிறது. தங்களது முயற்சிகளை இலகுபடுத்தும் ஒரு உபாயமாகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக நியமிப்பதற்கு ஆதரவளித்தது. நாடாளுமன்ற தேர்தலில் பின்னரான மங்கள சமரவீரவின் உரைகளிலும், ரணில் விக்கிரமசிங்கவின் உரைகளிலும் எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம் ஒரு முக்கிய இடத்தை பெற்றிருப்பதன் பின்னணி இதுதான். இதன் மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எதிர்ப்பரசியல் பாரம்பரியத்தை எதிர்க்கட்சி அரசியலாக உருமாற்றுவதில் வெற்றியீட்டியது. ஆரம்பத்தில் ஒரு சுயாதீன விசாரணை பொறிமுறை ஒன்றை உருவாக்குவதில் ஆர்வமுள்ளவர்கள் போன்று காண்பித்துக் கொண்ட கொழும்பு, நாளடைவில் மகிந்த தரப்பை காரணம் காட்டி அதிலிருந்து விலகிக் கொள்ளும் முயற்சியையும் முன்னெடுத்



துவருகிறது. இவ்வாறானதொரு சூழலில் எங்களின் முன்னாலுள்ள தெரிவுகள் என்ன? ஒடுக்கு முறைக்கு எதிராக போராடுகின்ற எந்தவொரு சமூகமும் முதலில் தன்னுடைய ஆற்றல் எங்கு திரண்டிருக்கிறது என்பதை கண்டுகொள்ள வேண்டும். அதனை கண்டுகொள்ள முடியாத சமூகங்களால் தான் எதிர்கொண்டுள்ள ஒடுக்குமுறையிலிருந்து விடுபட முடியாது. 2009இற்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே, தமிழ் மக்களின் பலமாகவும் அரசியல் ஆளுமையாகவும் இருந்தது.



அவர்களது பலத்தின் நிழலின் கீழ் இருந்தவாறே அனைத்து அரசியல் முன்னெடுப்புக்களும் தீர்மானிக்கப்பட்டன செயல்வடிவம் பெற்றன. இராணுவ பலத்தை ஜனநாயக பலமாக உருமாற்றும் வேலைத்திட்டங்களில் ஒன்றாகவே,. தமிழ் தேசியக் கூட்டமைப்பை விடுதலைப் புலிகள் உருவாக்கினர். ஆனால் 2009இல் ஒரு பேரவலத்திற்கு நாங்கள் முகம்கொடுத்த போது, ஈழத் தமிழர் தேசம் தன்னுடைய அனைத்து கட்டமைப்புக்களையும் இழந்து நிர்கதிக்குள்ளானது. இந்த இடத்தில்தான் தமிழ் சமூகத்தின் உரிமைக் குரலை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் பிரதான சக்தியாக தமிழ் புலம்பெயர் சமூகம் வெளித்தெரிந்தது. புலம்பெயர் சமூகத்தின் செயற்பாடுகள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்ட தலைமைத்துவம் ஒன்றின் கீழ் இல்லாவிட்டாலும் கூட ஐரோபிய நாடுகளில் இடம்பொற்று வரும் புலம் பெயர் சமூகத்தின் செயற்பாடுகளுக்கும் சர்வதேச சமூகம் சிறிலங்காவின் மீது மேற்கொண்டுவரும் அழுத்தங களுக்கும் இடையில் ஒரு பிரதான தொடர்புண்டு. இன்றும் ஈழத் தமிழ் மக்களின் உரிமைக்குரல் சர்வதேசமெங்கும் உயிர்நிலையில் இருப்பதற்கு புலம்பெயர் சமூகத்தின் தொடரச்சியான விழிப்புணர்வு செயற்பாடுகளே பிரதான காரணம். உண்மையில் புலம்பெயர் சமூகத்தின் செயற்பாடுகளின் காரணமாகவே ஈழத் தமிழர் விவகாரம் தொடர்ந்தும் சர்வதேச அரங்கில் ஒரு பேசுபொருளாகவே இருந்துவருகிறது. சர்வதேச அரங்கு என்பது பலம்பொருந்திய நாடுகளின் அரங்குதான் ஆனால் அந்த அரங்கை கையாளுவதில்தான் எங்களது வெற்றியும் தங்கியிருக்கிறது. எமது உரிமைப் போராட்டம் காலத்திற்கு காலம் எவ்வாறு பிராந்திய உலகளாவிய சக்திகளின் நலன்களின் வழியாக நோக்கப்பட்டிருக்கிறது என்பதை நாமறிவோம் அதனை மீளவும் இந்த இடத்தில் பிரஸ்தாபிக்க வேண்டிய அவசியமில்லை ஆனால் எந்த சர்வதேச அரங்கம் அவர்களது நலன்களை கையாளு வதற்கான அரங்காக இருக்கிறதோ அதே சர்வதேச அரங்கை கொண்டுதான் அவர்கள் மீது அழுத்தங் களையும் பிரயோகிக்க முடியும். இந்த இடத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமகள் பேரவையின் ஆணையாளர் நவிப்பி ள்ளை குறிப்பிட்டிருக்கும் ஒரு விடயத்தை கருத் தில் கொள்ளலாம். புலம்பெயர் சமூக பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றும் போதுதான் அவர் இந்த கருத்தை தெரிவித்திருக்கிறார். ஐக்கியநாடுகள் சபையின் ஊடான நடவடிக்கைகள் குறுகியபுவிசார் அரசியல் மற்றும் தேசிய நலன்கள் தொடர்பான குறுகிய விளக்கங்கள் ('Short term geopolitical interest and narrow minded definition of national interest) என்பவற்றால் இடையூறுகளை சந்தித்து வருவதாக கூறியிருக்கும் அவர் இதன் காரணமாகவே இலங் கை விவகாரம் ஐ.நா. பொதுப் பேரவைக்கோ (General Assembly) அல்லது பாதுகாப்புப் பேரவைக்கோ (Security. council)எடுத்துச் செல்லப்பட வில்லை இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் மனித உரிமைகள் பேரவைக்கு கொண்டு வரப்பட்டது. அதற்கு ஐ.நா செயலாளர் நாயகத்தி னால் நியமிக்கப்பட்ட நிபுனர் குழுவே காரணம். அவ்வாறானதொரு நிபுனர் குழுவை அவர் நியமிப பதற்கு நீங்கள் வாழும் நாடுகளின் நீங்கள் தொடர்ச்சி யாக மேற்கொண்ட அழுத்தங்க ளே காரணம். இறுதியில் அனைத்துக்கும் காரணம் யார்?

சிறிலங்காவின் விவகாரம் இந்தளவிற் சர்வதேசயப் படுத் தப்படுவதற் கான அடித்தளம் மேற்படி நிபுனர் குழுவின் அறி க்கையின் வழியாகத் தான் உருவாகியது. அந்த அறிக் கைதான் பின்னர் அமெரிக்க பிரேர ணையாக நீட்சி பெற்றது. இதன் விளைவாகத்தான் மனித உரிமைகள் பேரவையின் கீழ் ஒரு சர்வதேச விசாரணை அறிக்கை வெளிவந்தது. இங்கு கவனிக்க வேண்டிய பிறிதொரு முக்கியமான விடயம் ஒன்று முண்டு. அதாவது மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு 2009இல் யுத்த வெற்றியை பிரகடணம் செய்த பின்னர், முதன் முதலாக சிறிலங்காவை பாராட்டித் தான் மனித உரிமைகள் பேரவையில் ஒரு அறிக்கை வெளியாகியிருந்தது. உண்மையில் புலம் பெயர் சமூகத்தின் தொடர்ச்சியான செயற்பாடுகள் இல்லாதிருந்திருந் தால் அந்த பாட்டுனேயே சிறிலங்காவின் இறுதியுத்த விவகாரம் காலாவதி யாகியிருக்கும் ஆனால் புலம் பெயர் சமூகத்தின் தொடர்ச் சியான செயற்பாடுகளினால் ஏற் பட்ட உலகளாவிய விழிப்புணர்வு, அந்த விழிப்புணர்விற்கு பதிலளிக்க வேண்டிய பொறுப்பிலிருந்த சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் ஆகியவற்றின் தொடர்ச்சியான அழுத்தங்களின் விளைவாகவே சிறிலங்காவின் குற்றங்கள் சர்வதேச மயப்படுத்தப்பட்டன அந்த வகை யில் நோக்கினால் முதலாவது கட்டத்தில் புலம்பெயர் சமூகம் ஒரு முக்கிய வெற்றியை பெற்றி ருக்கிறது. அதாவது சிறிலங்காவில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் ஈழத் தமிழ் மக்களுக்கு ஒரு பெரும் அநீதி நிகழ்ந்துள்ளது. அதற்கு பொறுப்பானவர்கள் அணைவருமே சுதந்திரமாக இருக்கின்றனர்,என்னும் உண்மை சர்வதேச மயப்படுத் தப்பட்டிருக் கிறது இப்போது இந்த வெற்றியை முழுமையானதொரு வெற்றியாக மாற்றுவதற்கான உலகளாவிய...

தொடர்ச்சி பக்கம்..17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்வளத் தரவுகள் (2015) வடமாகாணம்



1983 இல் வட மாகாண மொத்த கடல் உற்பத்தி 97,433 மெட்ரிக் தொன் 2015 மொத்த கடல் உற்பத்தி 66,308 மெட்ரிக் தொன். போர் ஓய்விற்கு வந்து 7 வருடங்களின் பின்னும் வட பகுதி மீன் பிடி 1983 இல் இருந்த அளவை நெருங்கவில்லை. இதற்கு பின்வரும் அம்சங்கள் முக்கிய காரணங்களாக அமைகின்றன

1.இடம்பெயர்வும் முறையான மீள்குடியேற்றமின்மையும் இன்னும் பாதிப்பைக் கொடுத்துள்ளது. (மயிலிட்டி)

2.அவர்களுக்கு அதிக வருமானம் ஈட்டிக் கொடுத்த இடங்கள் இன்னும் படையினரிடமிருந்து விடுபடவில்லை.

3.இடம் பெயர்ந்த மீனவர்கள் கடல் பிரதேசத்தை விட்டு பலமைல் தூரத்தில் தற்காலிக வதிவிடத்தில் இன்னும் இருப்பது.

4.கடல்கரைகளை ஆக்கிரமித்து உல்லாச விடுதிகளைக் கட்டி அப் பிரதேசங்களில் மீன் பிடித்தல் செயல்பாடுகள் முடக்கபட்டுள்ளமை.

5.ஏற்கெனவே தொழில் புரிபவர்களுக்கு முறையான ஒரு இறங்குதுறை கூட இல்லாதது.

6.தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தொழில் உபகரணங்கள் இல்லை படகு,வலை, இயந்திரம், போன்றன

7.மாவட்ட எல்லையைத் தாண்டி வரும் தென்னிலங்கை மீனவர்களுக்கு எதிராக உள்ளூரில் தற்பொழுது உள்ள சட்டங்களைக் கூட நடைமுறைபடுத்த முடியாது அஞ்சும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகள் தாக்கபடுகின்றமை, அல்லது அச்சுறுத்தப்படல் அல்லது கட்டாய இட மாற்றத்திற்குள்ளாகுதல்.

8.தடை செய்யப்பட தொழில் முறையை முகாம்களுக்குள் இருந்து தென்னிலங்கை மீனவர்கள் செய்வதை ஊக்குவிக்கும் படையினர். கடலட்டை,பிடித்தல்,தடை செய்யப்பட்ட தங்கூசி, நைலான் வலை, ஒழி பாய்ச்சி மீன் பிடித்தல், டைனமைட் மீன்பிடி.

9.மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட மீனவர்களை விட அதிகமான தென்னிலங்கை மீனவர்கள் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் அனுசரணையோடு கூட்டம் கூட்டமாக வந்து கடல் கரை ஓரங்களில் உள்ள படை முகாம்களை அண்டிய பிரதேசங்களை ஆக்கிரமித்து எந்த வித அனுமதியுமின்றி மீன் பிடி வளம் நிறைந்த இடங்களில் தமது தொழில் மையங்களை அமைத்தல். உறுதி உடைய உரிமையாளர்கள் கூட அவர்களை நெருங்க முடியாது படையினரின் பாதுகாப்பில் உள்ளனர். எந்த விதமான இறங்குதுறையோ அல்லது படகு பாதுகாப்பு மையங்களோ இன்மையால் ஆண்டு தோறும் இடம் பெரும் இயற்கை அனர்த்தங்களால் அழிவடையும் உபகரணங்களுக்கு மாற்று உபகரணங்களை கொள்வனவு செய்ய தயக்கம் காட்டுதல்.

10.நன்னீர் மீன் பிடியைத் தவிர கரையோர மற்றும் ஆழ்கடல் மீன்பிடி என்பது மாகாண சபையின் அதிகார வரம்பிற்குள் இல்லாததும் இப் பிரச்சினைகளின் தீர்விற்குத் தடையாகவுள்ளது.

மிகப் பெரும் செல்வத்தைக் குவிக்கக் கூடிய எமது மீன் வளம் சரியான திட்டமிடல், நிதி முதலீடு,தொழிநுட்பம், முகாமைத்துவம் இன்றி அதன் உச்ச கட்ட வளர்ச்சியை அடைய முடியாது. பிரித்தானிய தமிழர் பேரவை துறைசார் அறிஞர்களின் உதவியுடன் பிரச்சனைகளை அடையாளம் காணுவதனை முதற் கட்டமாகவும் ஒருங்கிணைந்த திட்டமிடலை உருவாக்கல் மற்றும் அமுல் படுத்தலை அடுத்த கட்டங்களாகவும் செயல்படுத்த உலகெங்கிலுமுள்ள ஆர்வலர்களை இணைத்து வருகின்றது.

புலம்பெயர் அமைப்புகள் ஒன்றிணைந்து செயல்பட்டால் எம் தேசத்தின் மிகச் சிறந்த வளங்களில் ஒன்றாகிய மீன் வளம் அந்தப் பிராந்தியத்திற்கே முன் மாதிரியாக வளர்ச்சியடைவதுடன் பல்லாண்டுகளாக வறுமையின் பிடிக்குள்ளும் இடம் பெயர்வு போன்ற பல துயரங்களை அனுபவித்து வரும் கடல் வளம் சார் தொழிலாளர்கள் வாழ்க்கையில் நாம் ஒளியேற்றி வைக்கலாம்.

தேச நிர்மாண செயலணி

பிரித்தானிய தமிழர் பேரவை

| மாவட்டம் | முல்லைத்தீவு | கிளிநொச்சி | மன்னார் | யாழ்ப்பாணம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| மீனவக் குடும்பங்கள் | 3451 | 3914 | 9542 | 21.117 | 38.024 |
| செயல்படு மீனவர்கள் | 4815 | 3998 | 9300 | 22119 | 40223 |
| இயந்திரப் படகுகள் | 946 | 967 | 3700 | 8010 | 13623 |
| கடற்பரப்பு (மு-அ) | 72 | 128 | 163 | 182 | 545 |
| களப்பு கரையோரம் (மு-அ) | 125 | | | | 125 |
| குள்ளாப் படகு | 233 | 9 | 12 | 15 | 269 |
| கரை வலை | 87 | 5 | 0 | 6 | 98 |
| படகுத் தரிப்பிடங்கள் | 28 | | | | 28 |
| மீனவர் அமைப்புக்கள் | 27 | 25 | 54 | 210 | 316 |
| 1983 மொத்த கடல் உற்பத்தி (மெட்ரிக் தொன்) | 9251.15 | 11.190 | 14.400 | 31.467 | 66.308 |
| 2015 மொத்த கடல் உற்பத்தி (மெட்ரிக் தொன்) | 17.840 | 7600 | 23.316 | 48.677 | 97.433 |

## ஈழத்தமிழரின் இதயத்தின் வேண்டுகோளும் காயம் பட்ட நெஞ்சங்களின் கனிவான எதிர் பார்ப்பும்

## தமிழக முதல்வரை வடமாகாண முதல்வர் உடன் சந்திக்க வேண்டும்!

ஈழத்தமிழர்களின் சாபக்கேடு இன்னமும் தீர்ந்தபாடில்லை அவர் அந்தப்பக்கம் இவர் இந்தப்பக்கம் என்ற விமர்சனங் கள் ஒரு புறம். இலங்கை அரசுடன் சேர்ந்துகொண்டு எப்பாடுபட்டாவது தமிழினத்தை பலவீனப்படுத்துகிறோம் பார் என்போர் இன்னொரு புறம். உரத்து கதைக்க வேண்டிய புத்திஜீவிகள் நமக்கென்ன என் பது போல தம்பாடு. வடக்குமாகாண சபை உறுப்பினர்கள் சிலர் மாகாணசபையை இயங்க விடாமல் காட்டுகி றோம் பார் என்று கச்சைகட்டி நிற்பது இன்னொரு பக்கம். இதனிடையே தம்மால் தெரிவு செய்யப்பட்ட அரசி யல்வாதிகள் என்ன செய்கின்றார்கள் என்று ஏதும் தெரியா அப்பாவி தமிழ் மக்கள் மறுபுறமாக ஈழதமிழினத்தின் பாடு அந்தோ என்றாகிப் போகிறது. இது தவிர அமெரிக்காவின் கருத்தை ஆதரிப்பவன் சீ.ஐ.எ. இந்தியாவின் உறவைப் பலப் படுத்த வேண்டும் என்பவன் றோ, அனைத்துத் தமிழர்களும் ஒன்று படவேண்டும் என நினைப்பவன் துரோகி. புலிகளை ஆதரிப்பவன் பயங்கர வாதி. நடு நிலையைச் சொல்பவன் வெகுசன விரோதி. ஆக ஒட்டு மொத்தத்தில் தமிழினப்பற்றார்கள் என்று எவருமே எம்மிடம் இல்லாத வாறு நாமே நமக்குப் பகையாகியுள்ளோம். சுயநலத்தின் பாற்பட்டு நாம் செய்த பிரசாரங்கள் எங்கள் தமிழ்மண் முழுவதிலும் கட்டு ப்படுத்த முடியாத நோயாகப் பெருகி பரவி எம் இனத்தின் வேரை அறுக்கிறது இன் நிலையில் வடமாகாண முதல்வர் உடனடியாகவே தமிழக முதல்வர் செல்வி ஜெயலலி தாவையும் இந்தியப் பிரதமர் மோடியையும் சந்திக்க வேண்டும். இந்த சந்திப்பு தென்பகுதியில் எமக்கு சாதகமான முடிவுகளைத் தரும்' என்பதுடன் தமிழ் மக்களிடமும் ஒரு நேர்க்கனிய மன மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது உறுதி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



15ம் பக்க தொடர்சி..

செயற்பாடுகள் தேவைப் படுகிறது. இந்த இடத்தில் சிந்திக்க வேண்டிய பிறி தொருவிடயமும் உண்டு. சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் நல்லிணக்கம்,இன-நல்லுறவு என்றெல்லாம் பேசினாலும் கூட அவர்கள் ஒரு போதும் தமிழ் மக்களுக்கென்று ஒரு அரசியல் தீர்வை தமிழ் மக்கள் வழங்கிய ஆணைக்கு அமைவாக வழங்கப் போவதில்லை இதனைத்தான புலம் பெயர் சமுகம் அதனுடை ய இரண்டாவது கட்டசெயல் திட்டமாக முன்னெடுக்க வேண்டும் சிறிலங்காவின் ஒற்றையாட-சி அதிகார எல்லைக்குள் ஒரு போதும் தமிழ் மக்களின் நியாய மான கோரிக்கைகள் உறுதிப் படுத்தப்படமாட்ட-ாது என்னும் உண்மையை சர்வதேச மயப்படுத்த வேணடும் இதன் மூலம் சிறிலங்காவில் ஆட்சி மாறி-னாலும் சிங்கள மேலாதிக்க மனோபாவத்தில் எந்த வொரு மாற்றமும் ஏற்படவில்லை என்பதை சர்வதேச அரங்கில் ஓங்கி ஒலிக்க வேண்டும். இன்று ரணில்-மைத்திரி கூட்டுமகிந்தவை காரணம் காட்டி பின்வா-ங்குவது போன்றுதான் 1957இல் பண்டார நாயக்க ஐக்கிய தேசியக்கட்சி யையையும் பிக்குகளையும் காரணம் காட்டி ஒப்பந்தத்தை கிழித்தெறிந்தார். இது சிங்கள அடி-ப்படைவாதத்தின் வாழையடிவாழை பிரச்சினை. இந்த உண்மையை சர்வதேச மனித உரிமை வாதிகள் அமை-ப்புக்கள் மத்தியில் வேரூன்றச் செய்ய வேண்டும். இதன் மூலமே சர்வதேச அரங்கில் தமிழரின் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையை சாகாமல் பாதுகாக்க முடியும்.







# கடைசி நாளில் கடந்த இரவும் விடிந்தபின் விளைந்தவையும்



சுற்றி வர துப்பாக்கி சன்னங்கள் இடைவெளியில் ஆர்.பி.ஜி எறிகணைகள் சுருதி பாடிக் கொண்டிருக்க அங்குமிங்கும் பறந்த ஆட்லரி யால் அண்ணாந்து பார்த்தேன் ஆகாய அடித்து கொல்லமுடியாத அருகில் நா-

ங்கள் அதனால் காரிருள-ல் கரி மருந்துப் புகைக்குள் கண்கள் துக்கம் மறந்தபடி இருக்க அந்த இரவுகடந்து கொண்டிருந்தது. மே17.2009 காலை வெளிச்சம் தெரி-கிறது விடிந்த பின் அடுத்து எமெக்கென்ன நடக்க போ-கிறதென்று எமக்கே தெர-யாத நிலை அந்த நேரத்-திலும் ஐ.பி.சி.தமிழ் மூலம் அதை அறியும் ஆவலில் சிறிய வானொலி என்கையில் அடுத்த பக்கம் என்ன நடக்கி றதென்று பார்பதற்கு நான் பக்கத்து பதுங்கு குளிக்குள் பதுங்கி பதுங்கி செல்கிறேன். படுக்கை புண்ணுடன் இருந்த என் உறவுகள் சில என்ன-ட ம் அண்ணா வெளிய என்ன நடக்கிறது? எம் அருகில் ஆமி கடந்து செல்கிறான் இது நான் அண்ணா தண்ணீர்ப் போத் தலை எடுத்துத் தா-ங்கோநான் கொடுக்கிறேன் குடித்து விட்டு அவர்கள் இறுதிப் பயணத்திற்குத் தய-ாராகி விட்டார்கள் வாயில் குப்பி யுடன் அதை தடுக்க முடியா தவனாய்,நான் மீ-ண்டும் எம் பதுங்கு குழிக்குள் மீண்டே-டன். அடுத்த பதுங்கு குளிக்குள் இருந்து இன்னுமொரு குரல் அந்த குரலுக்கு சொந்தக்காரி இரண்டு காலிலும் மட்டை வைத்துக்கட்டப்பட்ட நிலை யில் இருந்த ஒரு சகோதரி அவள் கேட்டபடி அவளை பதுங்கு குளிக்குளிருந்து வெளியே எடு-த்து விட்டோம்.அந்த வேளையில் குண்டு சத்தத்தையும் மீறி ஒரு குரல் அண்ணா!. நீங்கள் எல்லோரும் அங்கால போங்கோ ஆமி வாரான் நான் இங்கேயே வெடிக்க-போறன் அதனால் அதற்கு மேல் சிறிது நேரமும் தாமதிக்காமல் நாங்கள் சிறு வெள்ளை கொடியுடன் சிறு குழுவாக இராணுவத்தை நோக்கி புறப்பட்டே-ாம். எம்மை சுற்றி வளைத்த இராணுவம் முதலில் கேட்ட கேள்வி அவ்விடத்திற்குள் எவ்வாறு உயிருடன் இருந்தீர்கள்?

ஆம் அதிசயம் தான்!!!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முடிந்து போனதென்று மூடிவைக்க முடியாத ஈழ விடுதலைப் போராட்டம்...

சு.பிரபா

வரலாற்று ரீதியாய் தனித்தனி தேசங்களாய் தனித்த இனத்துவ அடையாளங்களுடன் இலங்கைத்தீவில் இருந்த இரண்டு தேசங்களை காலனித்துவ ஆட்சியாளர்கள் தம் கட்டுக்குள் கொண்டு வந்து நிர்வகிப்பதற்கு இலகுவாக ஒன்றாக்கி கடந்த காலத்தில் ஆட்சி செலுத்தி வந்தனர் என்பதை நாம் அறிவோம். பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இலங்கைத் தீவுக்கு 1948ம் ஆண்டு சுதந்திரத்தை வழங்கிய போது வரலாற்று ரீதியாக முன்பு இருந்துவந்த இரு தேசங்களை மறந்துவிட்டு முழு தீவுக்கும் ஒரே ஆட்சியாளர்களிடம் அதிகாரத்தை வழங்கி விட்டுச் சென்றனர். அதற்கு முதல் இலைமறை காயாக இருந்து வந்த இனப் பிரச்சனை பண்டாரநாயக்கா கொண்டு வந்த தனிச் சிங்கள சட்டத்தின் மூலம் பூதாகாரமாய் உருவெடுத்து சிங்கள அடக்குமுறைகளுக்கு எதிராக தமிழர்களை போராட வைத்தது.

தமிழர்களுக்கு ஒரே தீர்வு தனித் தமிழ்ஈழமே என்ற கொள்கையுடன் அரசியல்மயப்படுத்த அகிம்சை வழியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களை சிங்களவர்கள் கொடூரமாய் ஒடுக்கியதன் விளைவாய் தமிழர்கள் ஆயுதத்தை கையிலேந்தினர். ஆரம்பத்தில் பல்வேறு போராளிக் குழுக்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட போதும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கட்டுக்கோப்பும் நேர்த்தியும் அந்த அமைப்பின் மீது தமிழ் மக்களை பற்றுக் கொள்ள வைத்தது. தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாக புலிகள் தம்மை பரிணாமப்படுத்திக் கொண்டதோடு இலங்கை அரசுக்கெதிராய் போராடி தமிழர்களின் பாரம்பரிய நிலமான தமிழீழத்தின் கணிசமான பகுதிகளை மீட்டெடுத்து அங்கு ஓர் சுதந்திர அரசாங்கத்தினை நிர்வகித்துக் கொண்டு ஏனைய பகுதிகளை மீட்டெடுக்க போராடி வந்தனர்.

மாறிவரும் பூகோள நிலைமைகளுக்கேட்ப தங்கள் போராட்டவடிவங்களை மாற்றியமைத்து சர்வதேச மட்டதிலும் செல்வாக்குச் செலுத்தும் ஒரு மிகப் பெரும் சக்தியாக புலிகள் வியாபித்திருந்தனர். ஆயுதப் போராட்டத்தினோடு மாத்திரம் நின்று விடாமல் அரசியல் ரீதியிலும் முனைப்புடன் செயற்பட்டு சர்வதேச அனுசரணையுடன் தனித் தேசமாக தமிழீழத்தை உலக அரங்கில் முன்னிறுத்த முயற்சித்தனர்.

பிராந்திய அரசியல், மேற்குலக அரசியல், சர்வதேச போட்டி அரசியல் போன்ற மாபெரும் சூறாவளிகளில் சிக்கி பலம் பொருந்திய பல சுதந்திர போராட்ட அமைப்புக்கள் கடந்த காலத்தில் உருக்குலைந்து போயின. பயங்கரவாதம்,விடுதலைப்போராட்டம் இந்த இரண்டுக்கும் இடையில் இருக்கும் வித்தியாசங்களை சர்வதேசம் வரையறை செய்வதில் விட்ட தவறுகள் பல சுதேசிய இனங்களின் சுதந்திரக் கனவுகளை காவு கொண்டுவிட்டது. அந்த வகையில் புலிகள் அமைப்பின் சுதந்திரம்கோரிய ஆயுதப் போராட்டமும் ஒரு கொடூர இனப் படுகொலையுடன் 2009ல் முடித்து வைக்கபட்டது. எனினும் சர்வதேச மயப்படுத்தப்பட்ட ஈழவிடுதலைப் போராட்டம் தன்னுடைய முடிவுரையை முள்ளிவாய்க்காலோடு முடித்துக் கொள்ளவில்லை.

சுதந்திரம் கோரி போராடிய பல இனங்களின் ஆயுதப் போராட்டங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு நாடுகளில் சர்வதேசங்களின் நேரடி மற்றும் மறைமுக உதவிகளுடன் ஒடுக்கப்பட்டுத் தானிருக்கின்றது. ஆயினும் போரியல்ரீதியான தோல்விகளை காரணமாய்க் கொண்டு அந்த இனங்கள் தம் சுதந்திரப் போராட்டத்தினை கைவிட்டு விட வில்லை. சமீபத்தில் சூடானிடமிருந்து சுதந்திரம் பெற்ற தென் சூடான் அதற்கோர் எடுத்துக்காட்டாகும். ஈழத்தில் நாம் சுதந்திரத்திற்காய் ஆயுதவழியில் போராடிக் கொண்டிருந்த அதே சமகாலத்தில் தென் சூடானும் சூடானிடமிருந்து சுதந்திரம் கோரி போராடிவந்தது, சூடானில் இடம்பெற்ற இரண்டு கட்ட உள்நாட்டுப் போரில் ஏறக்குறைய 3மில்லியன் தென் சூடானிய மக்கள் இனப் படுகொலை செய்யபட்டிருந்தனர், எனினும் சூடான் மக்கள் விடுதலை இயக்கம் தம்முடைய சுதந்திரம்

18ம் பக்க தொடர்சிகோரிய போராட்டத்தி

லிருந்து பின்வாங்கி விடவில்லை. சர்வதேசத்திற்கு தங்கள் போராட்ட நியாயங்களை எடுத்துச் சொன்னார்கள், அரேபிய மேலாதிக்கவாதமும் இஸ்லாமிய அடிப்படைவாதமும் தம்மை ஒடுக்குவதாய் முறையிட்டனர், வரலாற்றுரீதியாய் தாம் தனித்த இனத்துவ அடையாளங்களை கொண்டவர்கள் என்றும் சுதந்திரம் கோர உரித்துடையவர்கள் என்றும் வாதிட்டனர். தங்கள் போராட்டத்தினை சர்வதேச மயப்படுத்தியதின் விளைவாய் நோர்வேயின் தலையீட்டின் மூலம் சூடான் அரசுக்கும் சூடான் மக்கள் விடுதலை இயக்கத்திற்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அமெரி க்கா தன் ஏகோபித்த ஆதரவை சூடான் மக்கள் விடுதலை இயக்கத்திற்கு வழங்கியி ருந்தது.

2002ம் ஆண்டு இடம்பெற்ற இந்த ஒப்பந் தத்தின் பின்னரும் தென்சூடானியர்கள் இன அழிப்புக்கு ஆளாகியிருந்தனர், சூடானியப் படையினர் கொடூரப் படுகொலைகளை துணை ராணுவங்களை வைத்து மேற்கொண்டனர், இதனால் அதிருப்தியடைந்த ஐ.நா பாதுகாப்புச் சபை 2004ம் ஆண்டு ஓர் தீர்மானம் கொண்டு வந்தது, சூடான் அரசு ஒப்பந்தங்களை நிறை வேற்றாது போனால் பொருளாதாரத் தடை ஆயுதத் தடைக்கு மேலதிகமாக சர்வதேச மட்டத்தில் நடவடிக்கையெடுக்கப்படும் என்ற அந்த தீர்மானத்தை 13 நாடுகள் ஆதரித்தன. சீனாவும் பாகிஸ்தானும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. பெரும்பான்மை ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

இதன் தொடர்ச்சியாக தென்சூடானுக்கு 2005ம் ஆண்டு 5 ஆண்டுகள் தன்னாட்சி அதிகாரம் வழங்கப்பட்டது. ஆயினும் இந்த 5ஆண்டுகளுக்குள் ஏறக்குறைய 3 லட்சம் தென்சூடானியர்கள் சூடானிய அரசபடைகளால் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அதன் உச்சகட்டமாக டார்பூரில் 1லட்சம் தென் சூடானியர்கள் இன அழிப்புக்கு ஆளாகியிருந்தனர். சூடானிய அரசின் மீது இனப் படுகொலை குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. இவற்றின் காரணமாக 20011ம் ஆண்டு சூடானிட

மிருந்து தென்சூடான் பிரிந்து செல்வதா வேண்டாமா என்ற முடிவை தென்சூடானியர்கள் பொது வாக்கெடுப்பின் மூலம் தீர்மானித்துக் கொள்ளலாம் என்ற ஒப்பந்தத்தினை சூடான் அரசு சர்வதேச அழுத் தம் காரணமாக ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. 99சதவிகிதமான தென்சூடானியர்கள் பிரிந்து செல்வதற்கு ஆதரவாக தம் தாயகத்திலிருந்தும் புலம்பெயர் தேசங்களிலிருந்தும் வாக்களித்தனர். 09.:07.:2011 அன்று தென் சூடான் சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டது. ஒரு தேசத்தின் சுதந்திரக் கனவு பலித்தது.

தென்சூடான் பிரிந்து செல்வதற்கு ஐ.நா உற்பட மேற்குலகம் உதவியதற்கு வடசூடா னின் சீன ஆதரவு நிலைப்பாடும், தென்சூடா னில் கண்டு பிடிக்கப்பட்ட எண்ணை வளமும் காரணம் என்று ஒருசாரார் கூறுகின்றனர். ஆயினும் அது ஒரு தேசம் பிரிந்துசெல்லும் அளவுக்கு காத்திரமான பங்காற்றியிருக்குமா என்பது சந்தேகமே. ஏனெனில் தென்சூடானின் எண்ணை வளம் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கிறது ஒரு சில பத்தாண்டுகளுக்கு மேல் அகழக் கூடியதாய் அங்கு எண்ணை வளம் இல்லை. அத்துடன் இன்றும் பிரிந்து சென்ற தென்சூடானிலும் எண்ணை அகழ்வினை சீனாவே மேற்கொள்கிறது. எனவே மேற்குலகு தம் நலனுக்கேற்றவாறே நாடுகளின் பிரச்சனைகளில் தலையிடுகிறார்கள் என்ற எண்ணப்பாட்டிற்கு இது ஒரு கேள்விக் குறியாவுள்ளது.

சர்வதேசத்தினை நோக்கிய தொடர் நீதி கேள் போராட்டங்கள் நிச்சயம் ஒரு மாற்றத்தினை கொண்டு வரும். அந்த வகையில் சுமார் 5 தசாப்தங்களுக்கு மேலாக சுதந்திரம் கேட்டு போராடி வரும் நாமும் தொடர்ச்சியாய் விடு தலைக்காய் குரல் கொடுக்க வேண்டியவர் களாய் இருக்கின்றோம், கொடூர இனப்படு கொலையொன்றை மேற்கொண்ட இலங்கை அரசினை சர்வதேசத்தின் முன் குற்றவாளி களாக அடையாளம் காட்டுவதன் மூலம் நாம் இலங்கைத்தீவில் அடைந்த வேதனைகளுக்கும், உயிர்க்கொடைகளுக்கும் நியாயத்தை பெற்றுக் கொள்ளமுடியும்.

ஆயினும் சர்வதேச உதவியுடன் இலங்கை அரசால் கொடூர இனஅழிப்புக்கு ஆளாகிய நாம் தனித்து நின்று இப்பூமிப்பந்தில் எதனையும் சாதித்து விடமுடியாது. எமக்கு பக்கபலமாக பின்னணியாக பலம்மிக்க ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளின் ஆதரவினை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.மாறி வரும் உலக ஒழுங்குக்கேற்ப எம்மை மாற்றியமைத்துக் கொண்டு சர்வதேசம் ஏற்றுக் கொள்ளும்வகையில் எம் போராட்டங்களை, நீதிப்பயணங்களை முன்னெடுக்க வேண்டும்.

போரியல் ரீதியிலான சுதந்திரக் கோரிக்கைகளை சர்வதேசம் இன்று முற்றாக புறக் கணிக்கிறது. ஆயுத வழியில் ஒரு தேசம் சுதந்திரம் பெறுமானால் ஏனைய தேசங்களின் இருப்புக்கும் ஒருமைப்பாட்டிற்கும் பங்கம் வந்து விடுமென்று எண்ணுகின்றன எனவேதான் ஆயுதப் போராட்டங்களை ஒடுக்குவதற்கு அரசு களுக்கு உதவி செய்கின்றன. இதுதான் ஈழத் தில் எமக்கும் நடந்தது.

எனவே புலம்பெயர் தேசத்திலிருக்கும் தமிழர் கள் சாத்வீக வழிகளில் சர்வதேசத்தின் கவனத்தை தொடர்ச்சியாக ஈர்க்கும் விதமாக ஒன்றிணைந்து போராட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். முள்ளிவாய்க்கால் முடிவள்ள அதுவோர் புதிய ஆரம்பத்தின் தொடக்கப் புள்ளி..



ஒன்றாய் இணைவோம் விடுதலை பெற்றிடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தீவில் தமிழர் தேசத்திற்கான அங்கீகாரமும் சுயநிர்ணய உரிமையும் வழங்கப்படல் வேண்டும் !



இலங்கையில் தமிழர்களின் தொடர் ச்சியான அரசியல் நிலவரத்தை உலகின் பலதலைவர்களுக்கு தெரியப் படுத்தியது தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்று கூடல்கடந்த 23ம் திகதி மார்ச் மாதம் பிரித்தானியாவின் பாராளு மன்றத்தில் பிரித்தானிய தமிழர் பேரவையினரால் தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் களுடனான ஒன்று கூடல் நடாத்தப்பட்டது. பிரித்தானிய பிரதமரின் வாழ்த்துச் செய்தியுடன் நடைபெற்ற இவ் ஒன்றுகூடலில் பிரித்தானியாவின் பல தலைவர் கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மனித உரிமை தொடர் பான செயற்ப்பாட்டாளர்கள் என பலர் கலந்து சிறப்பித்திருந்தனர். பிரித்தானிய தமிழர்பேரவை சர்வதேசத்துடனான தமிழர்களின் உறவைப் பலப்படுத்துவதன் மூலம் மேற் கொண்டு வரும் அரசியல் செயற்பாடுகள் பல நாட்டுத் தலைவர்களின் கவனத்தையும் கரிசனையையும் தமிழர்கள் மீது ஏற்ப்படுத்தி உள்ளது. ஸ்பெயின் நாட்டில் பிரிந்து செல்லும்உரிமை கோரி போராடும் கடலோனியா (Cataloniya) மாநிலத்தின் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டவரும் கடலோனிய சுதந்திரத்திற்கான ஒருமைப்பாட்டு அமைப்பினை (Catalan Solidarity for independence) உருவாக்கிய வருமான அல்போன்ஸ் லோபெஸ் டேனா (Alfnos Lpze Tena) அவர்கள் வழங்கிய செய்தியில் தமிழர்கள் விடயத்தில் சர்வதேச நாட்டுத் தலைவர்களின் மாற்றம் தெளிவாகப் புலப்படுகின்றது.

அவர் தனது வாழ்த்துச் செய்தி யில் பிரித்தானிய தமிழர் பேரவையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட தமிழர்களுக்கான அனைத்துக்கட்சி பாராளுமன்ற குழுவினருடனான ஒன்று கூடலுக்கு அழைப்பு கிடைத்த மைக்கு பெருமை அடைகின்றேன். ஒரு கடலன் (Catalan)என்கின்ற முறையிலும் ஸ்பெயி ன் நாட்டின் முன்னால் நீதித்துறையின் உறுப்பினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் என்கின்ற வகையிலும் இலங்கைத் தீவில் உள்ள தமிழர் தேசத்தின் நிலைமைஇ அங்கீகாரத்திற்கான போராட்டம் அதன் இருப்பு மனித உரிமைகள் நீதி மற்றும் சுதந்திரம் என்பவற்றை புரிந்து கொள்வதுடன் அவற்றினை ஏற்றுக் கொண்டுள்ளேன். நீதி விசாரணையும்இ தண்டனை யளித்தலும்இ போர்க் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் இடம் பெறாது தடுத்தல் என்பவற்றினூடாக கௌரவமும் நீதியும் கூடிய ஒரு இறுதியான சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும். இலங்கைத் தீவில் தமிழர் தேசத்திற்கான அங்கீகாரத்தினை வழங்குதல்இ தமிழர்களுக்கான ஆட்சி அதிகாரங்களை உறுதிப் படுத்தல்இ இலங்கையில் உள்ள் இரு தேசிய இனங்களுக்கும் அதிகாரங்களைப் பகிர்தல்இ எதுவித கட்டுப்பாடுகளும் இன்றி தமிழர்களின் சுய நிர்ண ய உரிமை வழங்கப் படல் போன்ற இன முரண்பாட்டு அடிப் படைக் காரணிகளின் தீர்வு கொடுக்கப்பட வேண்டும். இவ்இலக்கை அடைவதற்கு தொடர்ந்து உங்கள் எல்லோருடனும் சேர்ந்து பணியாற்ற விரும்புகின்றேன்.' அவர் தனது செய்தியில் தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமையை அங்கீரிக்க வேண்டும் எனக்கூறியுள்ளமை பிரித்தா னிய தமிழர் பேரவை யின் சர்வதேசத் துடனான அரசியல் செயற்பாடுகளுக்கு கிடைத்த ஒரு வெற்றியாகும்.

# உருவு கண்டு எள்ளாமை வேண்டும்



ஒரு காட்டில் சிங்கம் ஒன்று வசித்து வந்தது. அது தனது பலத்தாலும், தோற்றத்தாலும், கர்ஜனையாலும் காட்டில் வசித்த அனைத்து மிருகங்களையும் பயமுறுத்தி வந்தது. பயம் காரணமாய் அனைத்து மிருகங்களும் சிங்கத்திற்கு கிட்டச் செல்வதில்லை. சிங்கத்தைக் கண்டால் பயந்து ஓடிவிடுகின்றன. ஆனால் 'ஈ' ஒன்று பயமின்றி சிங்கத்தின் மீது வந்து அமர்ந்தது. அதைப் பார்த்ததும் சிங்கம் கோபமுற்று கர்ஜனை செய்தபடியே..'உன்னை என் பற்களால் கடித்துக் குதறுவேன், நகங்களால் விறாண்டுவேன், நசுக்கிப் பொசிக்கிப்போடுவேன் என்றது. அதற்கு ஈயோ நீ பலசாலியாய் இருக்கலாம்.. உன்னைப் பார்த்து மற்ற மிருகங்கள் பயப்படலாம். ஆனால் நான் பயப்பட மாட்டேன். இன்னும் சொல்லப்போனால்..நீ சொன்னபடி உன்னையே நீ பற்களால் கடித்துக் கொள்ளவும், நகங்களால் விறாண்டிக் கொள்ளவும் செய்வேன்' என்றது. இதைக் கேட்ட சிங்கம் கோபத்துடன் ஏலுமாயின் அதைச் செய் எனசவால் விட..ஈ பறந்து வந்து சிங்கத்தின் முதுகில் அமர்ந்து அதைக் கடித்தது. ஈ முதுகில் அமர்ந்த போது.., அதை விரட்ட சிங்கம்.தன் பற்களால் முயன்ற போது..ஈ பறந்து விட சிங்கம் தன் முதுகைத் தானே கடித்துக் கொண்டது.ஈ சிங்கத்தின் முகத்தில் அமர்ந்த போது, அதை விரட்ட தன் கால் நகங்களால் முயல..ஈ பறக்க...சிங்கம் தன் நகங்களால் தன் முகத்தையே விறாண்டிக் கொண்டது. இவ்வாறு பலதடவை சிங்கத்தை நன்கு இம்சை செய்து விட்டு ஈ பறந்தது. சிங்கத்தினால் ஈயை பிடிக்கவோ நசுக்கவோ முடியவில்லை. அதனால் சிங்கம் தன் இயலாஇயை எணி வெட்கப்பட்டது. அதன் பின்புதான் சிங்கத்திற்கு புரிந்தது.தான் உடலளவில் வீரமாய் இருந்தாலும்.ஒரு சிறு ஈ த்ன்னை இம்சைப் படுத்தி விட்டதே என்று. உருவத்தைக் கண்டு யாரையும் எடை போடக் கூடாது.


இதைத்தான் வள்ளுவரும்.

"உருவுகண்டெள்ளாமை வேண்டும் உருள்பெருந் தேர்க்கச்சாணி யன்னார் உடைத்து" என்றார்.

பொருள்- உருவத்தால் சிறிதாக இருந்தாலும் அதை கேலி செய்து அலட்சியப் படுத்த்க் கூடாது பெரிய தேர் ஓடக் காரணமாய் இருப்பது சிறிய அதன் அச்சாணியே.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிவான தேவைகள் மதிப்பீடு
## Comprehensive Needs Assessment

30 வருட யுத்தத்தின் பின்னான எம் தாய் மண் மிகப் பெரிய பேரழிவுகளை சுமந்து கொண்டு வாழ்வாதாரம், குறைந்த பட்ச உள்கட்டுமான வசதிகள் போன்ற பல பிரச்சினைகள் கையாளப்படாமல் 7 வருடங்களைக் கடந்து விட்டது. மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது அங்கே மின் வசதி, நெடுஞ்சாலை வசதி, பொழுதுபோக்கு வசதி போன்ற அம்சங்களில் முன்னேற்றம் இருப்பதாக சிலர் பரவசப்பட்டுக் கொள்கின்றனர். ஆனால் அங்கே ஆழமாகப் புரையோடிப் போயுள்ள பல பிரச்சினைகளை நுணிப்புல் மேய்ப்பவர்களோ அல்லது உல்லாசப் பிரயாணம் போய் வருபவர்களோ பார்க்கத் தவறுகின்றனர். எத்தனை பெண்கள் போர் காரணமாக விதவை ஆகியுள்ளார்கள், அவர்களில் எத்தனை பேர் தம் வாழ்க்கையில் சமூக பொருளாதார தேவைகளை கையாள முடியாது நிராதரவாக உள்ளனர், விவசாயிகள், கடல் தொழிலாளர், கால் நடை வளர்ப்போர் எதிர்நோக்கும் பாரதூரமான பிரச்சினைகள் என்ன, படகுகள் மற்றும் விவசாய கருவிகள் போர்ச் சூழலில் அழிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர், மீள் குடியற்றப் பிரச்சினைகள் என்னென்ன, பெற்றோரின்றி ஆதரவற்று தவிக்கும் குழந்தைகள் நிலை என்ன, சிறு தொழில் வர்த்தகம் மற்றும் சிறு கைத்தொழில்கள் கூட மீளக் கட்டியெழுப்ப முடியாத நிலைமைக்கு காரணம் என்ன, ஆரம்ப, உயர்தர மற்றும் தொழிநுட்ப கல்வியின் பாரதூரமான பின்னடைவுக்கு காரணம் என்னென்ன, உடைக்கப்பட்ட வீடுகள், போக்குவரத்து வாகனங்கள் போன்றனவற்றின் எண்ணிக்கை, குடிநீர் மற்றும் நீர்ப்பாசன வசதிகள் என்று பல்வேறு பிரச்சினைகள் போரின் அழிவு இடம் பெற்ற எம் மண்ணில் 30 வருடமாக மதிப்பீடு செய்யப்பட முடியாத சூழல் இருந்தது.

ஆனால் போர் ஓய்ந்து 7 வருடங்களின் பின்னும் போரின் வடுக்களை சுமந்து நிற்கும் எம் தேசம் சரியான அழிவு மதிப்பீடு இன்றி சரியான திட்டமிடல் இன்றி பாதிக்கப்பட்ட மக்களை அவல வாழ்க்கைக்குள்ளேயே வைத்துள்ளது. உதவிகள் சரியான முறையில் சென்றடைய முடியாத நிலையில் அல்லது ஒரு சிலருக்கே உதவிகள் திரும்ப திரும்ப செல்வதும் பலர் தவிப்பதுமான நிலைமைகள், தேவைகள் எதுவென்று மதிப்பீடு செய்ய முடியாத நிலையில் எம் மக்களின் துன்பங்கள் நீடிக்கின்றன. வாழ்க்கை சுமையை தாங்க முடியாது தற்கொலை செய்யும் மனப்பாங்கு அதிகரிக்கின்றது. தோல்வி மனப்பான்மை அபாயகரமானது. அது ஒரு முழு சமுதாயத்தையும் பாதிக்கும். 2011இலிருந்து இவ்வாறான சமூக பொருளாதார பிரச்சினைகளை ஆராய்ந்து வந்த பிரித்தானிய தமிழர் பேரவை முதலில் ஒரு விரிவான தேவைகள் மதிப்பீடு (Comprehensive Needs Assessment) செய்யப்பட வேண்டியதின் அவசியத்தினை பல்வேறு மட்டங்களில் விவாதித்து நிபுணத்துவ ஆலோசனைகள் பெற்று அவை செயல் வடிவம் பெற நிபுணர் குழுக்களை உருவாக்கியது. தாயகத்திலுள்ள சிவில் சமூகம், துறைசார் நிபுணர்கள் கல்விமான்கள், மாகாண சபை, மற்றும் புலம்பெயர் நாடுகளிலுள்ள வள அறிஞர்கள், அமைப்புகள், அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து கருத்துருவாக்கம் மேற்கொண்டு வந்தது. இம் மதிப்பீட்டின் மூலம் கிடைக்கப் பெரும் தகவல்கள் அங்குள்ள தேவைகள் எவை, அதற்கான நிதி மற்றும் ஏனைய வளங்கள் எவை, என்னென்ன திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப் படவேண்டும் என்ற தகவல்களை விஞ்ஞானபூர்வமாக ஆராய்ந்து முடிவெடுக்க உதவி செய்யும். தாயக மக்களின் துயர் துடைப்பது மட்டுமல்லாது ஒரு வலுவான சமுதாயத்தினை கட்டியெழுப்பவும் ஒரு விரிவான தேவைகள் மதிப்பீடு அவசியமானது. பிரித்தானியாவிலோ அல்லது வேறு நாடுகளிலோ இம் முயற்சியில் இணைந்து செயல்பட விரும்புபவர்களை பிரித்தானிய தமிழர் பேரவை வரவேற்கின்றது.






## தமிழினப் படுகொலையின் ஏழாம் ஆண்டு நினைவேந்தல்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org